ஏப்ரல் - 2012


திருவள்ளுவர் ஆண்டு 2043

# செந்தமிழ்

தொகுதி : 56
பகுதி : 6

விலை ரூ. 10/-

## திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு



29.03.2012 அன்று கல்லூரியில் நடந்த முப்பெரும் விழாவில்
செந்தமிழ்க் கல்லூரிச் செயலர், மதுரைத் தமிழ்ச்சங்கச் செயலர்களுடன்
மதுரை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் பேராசிரியை
திருமதி. கோ.மு. பொன்னாத்தாள் அவர்களும், மதுரை மாநகரக் காவல்துறை
உதவி ஆணையர் திரு. ஆ. கணேசன் அவர்களும் பங்கேற்ற காட்சி.

# செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 56 திங்கள் இதழ்
பகுதி : 6 திருவள்ளுவர் ஆண்டு 2043
ஏப்ரல் 2012



வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 6000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |

முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

ஆசிரியர்
இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| பள்ளியெழுச்சி வகை வளர்ச்சி | முனைவர் கி. இராசா | 4 |
| தமிழ்த்தாத்தா உ.வே.சா.அவர்களின் முத்தமிழ் ஈடுபாடு | பா. வளன் அரசு | 10 |
| நாகை மாவட்ட மீனவர்களின் குழந்தைச் சடங்குகள் | ஆ. திருமேனி | 17 |
| சங்கதி வெளிப்படுத்தும் பாலின பாகுபாடு | வி. ரேணுகா தேவி | 23 |
| ஏக்கங்களின் தாக்கங்கள் | கா. வேழவேந்தன் | 29 |
| செறாஅஅம் | ஆறுவிரல் ஐம்பொறி | 30 |
| சேமித்துச் செழித்திடுவோம் | மா. இராமச்சந்திரர் | 33 |
| சங்க காலத்து இசைக் கருவிகளும் வழிபாடும் | ஆதி. பாலசுந்தரன் | 34 |

# இதழ் மணம்

## தமிழ்த்தாய் வாழ்த்து

தங்கத் தமிழகத்தில் நானிலம் போற்றும் நான்காம் தமிழ்ச்சங்கத்தை இராமநாதபுரம் சேதுபதி மரபின் வழித்தோன்றல் வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர் அவர்கள் அந்நியர் ஆட்சிக் காலத்தில் 1901ஆம் ஆண்டு நிறுவினார். அன்று தொடங்கி இன்று வரை மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் அர்ப்பணிப்பு உள்ளத்தோடு அரும்பாடுபட்டு தங்கம் நிகர் தமிழ்ச்சங்கத்தைத் தழைத்தோங்கச் செய்து வருகின்றனர். நான்காம் தமிழ்ச்சங்கத்தின் உண்மையான தமிழ்த்தொண்டினை அறிந்த தமிழக அரசு இவ்வாண்டு சித்திரை முதல் நாள் ( நந்தன ஆண்டு ) **தமிழ்த்தாய் விருது** வழங்கி பெருமைக்கு மேலும் பெருமை சேர்த்திருக்கிறது. பொற்குடத்திற்கு மேலும் ஒரு பொட்டு வைத்துப் பூரிப்படையச் செய்துள்ளது.

இதனைத் தமிழகத்திலுள்ள தமிழறிஞர்கள் பல்வேறு திசைகளிலிருந்தும் பாராட்டி மகிழ்ந்து வருகிறார்கள். கூட்டுறவுத்துறை அமைச்சர் மாண்புமிகு செல்லூர் கே. ராஜு அவர்கள், வணக்கத்திற்குரிய மதுரை மாநகரத் தந்தை வெ. இராசன் செல்லப்பா அவர்கள், வழிபாட்டிற்குரிய மதுரை ஆதீனம் 292வது குருமகாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர் பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்,

காமாட்சிபுரி ஆதீனம் அங்காள பரமேஸ்வரி சித்திர்பீடம் மகா சமஸ்தானம் ஸ்ரீலஸ்ரீ சிவலிங்கேசுவர சுவாமிகள் அவர்கள், திருக்கயிலாயப் பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம் 23வது குருமகாசன்னிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாசதேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள், மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர் பீட புலவரும், தமிழ் வளர்ச்சித்துறையின் முன்னாள் இயக்குநருமான முனைவர் சக்தி பெரியாண்டவர் அவர்கள், உலகத் திருக்குறள் பேரவையின் பொதுச் செயலாளர் திரு. ந. மணிமொழியன் அவர்கள், மதுரை மாநகராட்சியின் தெற்கு மண்டலத் தலைவர் திரு.பெ. சாலைமுத்து அவர்கள், நிலக்கோட்டை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்கள், கோபிச்செட்டிபாளையம் சித்தாந்த நன்மணி முனைவர் கா. அரங்கசாமி அவர்கள், மதுரை கிழக்குத் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. என். நன்மாறன் அவர்கள், திருக்கோவிலூர் தமிழ்ச்சங்கச் செயலாளர் கவிஞர் உதியன் அவர்கள், தருமபுரி தமிழ்ச்சங்கச் செயலாளர் திரு. கி. கூத்தரசன் அவர்கள், திருவண்ணாமலைத் தமிழ்ச்சங்கத் தலைவர் திரு. அருள்வேந்தன் பாவைச்செல்வி அவர்கள், தமிழ்ச்சங்கச் செய்திமடலின் ஆசிரியரும், தமிழகத் தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளருமாகிய திரு. நாகேஸ்வரன் அவர்கள், முன்னால் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் செ. கந்தசாமி அவர்கள், தினமணி நாளிதழின் ஆசிரியர் திரு. வைத்தியநாதன் அவர்கள்.... என இது போன்ற எண்ணற்ற தமிழ் உணர்வாளர்களும், அறிஞர்களும் தகுதிவாய்ந்த தமிழ்ச்சங்கத்திற்குத் தகுதியான விருது வழங்கப்பட்டிருக்கின்றது என இருபெரும் செயலாளர்களை அலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு பாராட்டியுள்ளனர். அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். இதுபோல் பல்துறை அறிஞர்களும் தங்கள் பாராட்டு மழையைப் பொழிந்து குளிர்வித்துள்ளனர்.

தமிழகத்தில் வாழும் வள்ளுவராக வழிகாட்டிவரும் பெரும்புலவர் இரா. இளங்குமரனார் மற்றும் பேராசிரியர் வெ. பெருமாள்சாமி அவர்களின் கடிதங்களும் செந்தமிழ் வாசகர்களுக்காக அப்படியே பிரசுரிக்கப்பட்டுள்ளது. இன்னும் பாராட்டுதல்களை வழங்கியிருக்கக்கூடிய அத்துணை பெருமக்களுக்கும் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து இம்மாதச் செந்தமிழ் இதழைத் தங்கள் கைகளில் தவழ விடுவதில் மகிழ்ச்சியடையும் நான்காம் தமிழ்ச்சங்கத்தார்.

**முனைவர் க. சின்னப்பா**

**இனி நீங்களும் இதழும்....**

# பள்ளியெழுச்சி வகை வளர்ச்சி

## (சென்ற இதழ் தொடர்ச்சி)

முனைவர் கி. இராசா
பாரதிதாசன் பல்கலைக் கழகம்

### தத்துவ வளர்ச்சி

தொடக்க நிலையில் எளிய கருத்துப் புலப்பாட்டினைச் சுட்டி நின்ற பள்ளியெழுச்சிப் பாடல்வகை, மாணிக்கவாசகர் காலத்தில் தத்துவ உண்மைகள் பொதிந்த பாடல்களாகக் கருத்து வளர்ச்சி பெற்றது. மாணிக்க வாசகர் பாடிய திருப்பள்ளியெழுச்சிக்குத் திரோதன சக்தி என்று தத்துவப் பொருள் உரைப்பர்.

> இறைவன் பள்ளி கொள்வதாவது, நம் உள்ளத்தில் தோன்றாது மறைந்திருத்தல்
> இந்நிலையே திரோதனம் என்று சொல்லப்படுகிறது. அவன் எழுதலாவது,
> அம்மறைவு நீங்கி வெளிப்பட்டுத் தோன்றுதல்; அங்ஙனம் தோன்றுமாறு
> வேண்டிப் பாடிய பகுதியாதலின் திருப்பள்ளியெழுச்சி எனப்பட்டது.

பள்ளியெழுச்சிப் பாடல்களில் கருத்து வளர்ச்சிக்கும், முதிர்ச்சிக்கும் மாணிக்கவாசகரின் புறச்சூழல் காரணமாய் அமைந்தது எனலாம். தொண்டரடிப் பெரியாழ்வார், தேவதேவி எனும் விலைமகளுடன் இளமையில் உறவு கொண்டிருந்தார். பின்னர் இச்சிற்றுறவு அறுந்து இறைவனோடு பேருறவு உண்டாயிற்று. பொற் உணர்வுகள் முற்றும் தணியது இளமைக் காலத்தில் தொண்டரடிப் பொடியாழ்வார் பள்ளியெழுச்சிப் பாடியுள்ளார். மாணிக்க வாசகர் உலக அனுபவம் மிக்கவராய், இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றுப் புறப்பற்றை அறுத்து இறைவனோடு மட்டும் அகப்பற்றை வளர்த்து அகவயமாகப் பாடியவர். பொறி உணர்வுகள் தணிந்து இறையருள் பெற்ற முதிய காலத்தில் மாணிக்க வாசகர் திருப்பள்ளி யெழுச்சி பாடினார். தொண்டரடிப் பொடியாழ்வார் பாடல்களில் உள்ள இயற்கையனுப உணர்வு,

மாணிக்கவாசகர் பாடல்களில் இறையனுபவ உணர்வாகக் கருத்து வளர்ச்சி பெறுவதற்கு இவை காரணமாயின எனலாம்.

## சமயச் செல்வாக்கு

சமண, பௌத்த சமயங்களில் செல்வாக்கை எதிர்த்துத் தோன்றிய வைதீக சமய மறுமலர்ச்சிக் காலத்தின் தொடக்க நிலையில் தொண்டரடிப் பொடியாழ்வார் திருப்பள்ளியெழுச்சி பாடினார் ( 8ஆம் நூற். ) வைதிக சமய மறுமலர்ச்சிக் காலத்தின் தொடக்க நிலையில் பண்டைத் தமிழர் தம் இயற்கையோடு இயைந்த வாழ்வை நினைப்பூட்டும் வண்ணம் சமயக் குரவர்கள் ஊர் ஊராகச் சென்று பாடியருளினர். இத்தகைய பக்தி இலக்கியத்தின் தொடக்க நிலைச் சாயல் தொண்டரடிப் பொடியாழ்வார் தம் பள்ளியெழுச்சிப் பாடல்களில் படிந்திருக்கக் காணலாம். மாணிக்கவாசகர், பக்தி இலக்கியக் காலத்தின் பிற்பகுதியைச் சார்ந்தவர் ( 9ஆம். நூற். ) பக்தி இலக்கியத்தில் இயற்கை நாட்டம் குறைந்து தத்துவ நாட்டம் தோன்றத் தொடங்கிய காலத்தவர்; பக்தி இலக்கியத்தில் தத்துவப் பொருளின் செல்வாக்கைப் பெருக்கியவர். இவ்வாறு மாற்றம் பெற்ற பள்ளியெழுச்சியில் காணப்பெற்ற இயற்கை நாட்டம், பக்தி இயக்கக் காலத்தின் பிற்பகுதியில் பாடப் பெற்ற பள்ளியெழுச்சியில் தத்துவ நாட்டமாக வளரலாயிற்று.

ஆழ்வார்தம் திருப்பள்ளியெழுச்சி இயற்கை உறவுடையதாகவும், மாணிக்கவாசகர் தம் திருப்பள்ளியெழுச்சி இறை - உயிர் - தளை உறவுடையதாகவும் கருத்தமைப்பில் வளர்ச்சியைக் காட்டுகின்றன. இது போன்று பொருளமைப்பிலும் இவை வளர் நெறியைக் காட்டுகின்றன. புலரிக் காலத்தில் புள்ளினங்களின் ஆர்ப்பையும் சங்கு இயம்புதலையும் இருவரும் குறிப்பிட்டுள்ளனர். இறைவனை வணங்கப் பன்னிரு ஆதித்யர்களும், பதினொரு உருத்திரர்களும், முருகனும், மருதர் ஒன்பதின்மரும், வசுக்கள் எண்மரும், தேவேந்திரனும், தேவர்களும், அவர்தம் பரிவாரங்களும், முனிவரும், இயக்கரும், கந்தருவரும், ஆகாயமும் பூமியும் அடையும்படி இடைவெளியில்லாமல் நெருங்கி நின்றனர் என்று தொண்டரடிப் பொடியாழ்வார் பாடுவார் ( திருப்பள்ளி 6 - 7 ) வீணை வாசிப்போர், யாழ் வாசிப்போர், வேதங்களோடு தோத்திரங்களான ஓதுவோர், மலர் மாலையைக் கையில் ஏந்தியோர், பக்திப் பரவசத்தால் தொழுவோர், தலை மீது கை வைத்துக் கும்பிடுவோர் என்று பக்தர் திருப்பெருந்துறை இறைவனைத் தொழுது நின்றதை மாணிக்கவாசகர் காட்டுவார் (திருப்பள்ளி. 4 – 5).

## பாவைப் பாடல்களில் பள்ளியெழுச்சிக் கூறுகள்

துயிலெழுப்புதல் பாவைப் பாடல்களின் கருத்துக் கூறுகளுள் ஒன்றாகும். பள்ளியெழுச்சிப் பாடல்கள் துயிலெழுப்புவதை நோக்கமாகக் கொண்டவையாகும். இதனால் பாவைப் பாடல்களும் பள்ளியெழுச்சிப் பாடல்களும் ஒன்றோடொன்று உறவு கொண்டு வளர்ந்துள்ளமை ஒப்புநோக்கத் தக்கதாகும்.

## துயிலெழுப்புதல்

ஆண்டாள் பாடிய திருப்பாவையின் முப்பது பாடல்களில் பதினான்கு பாடல்கள் துயிலெழுப்புவனவாக அமைந்துள்ளன. ( 6-15, 17, 19-21 ). மாணிக்கவாசகர் பாடிய திருவெம்பாவையின் இருபது பாடல்களில் எட்டுப் பாடல்கள் துயிலெழுப்புவகையாக உள்ளன. (1- 8).

திருப்பாவையில் தோழியரை மட்டுமன்றி, கண்ணன் (19), யசோதை (16), நப்பின்னை (18), பலராமன், நந்தகோபன் (17), பெரியாழ்வார் (6), குலசேகர ஆழ்வார் ( 7 ), நம்மாழ்வார் ( 11 ), பொய்கையாழ்வார் ( 12 ), தொண்டரடிப் பொடியாழ்வார் ( 13 ), திருப்பாணாழ்வார் ( 14 ), திருமங்கையாழ்வார் (15), வாயிற்காப்போன், கோயிற்காப்போன் (16) எனப் பாழைத் துயிலெழுப்புவனவாகப் பாடல்கள் அமைந்துள்ளன. திருவெம்பாவையில் தோழியர் மட்டும் துயிலெழுப்பப்படுகின்றனர்.

மாணிக்கவாசகர் திருப்பெருந்துறை இறைவனைத் துயிலெழுப்பும் போக்கில் திருப்பள்ளியெழுச்சி பாடியுள்ளார். எனவே இவர் பாடிய திருவெம்பாவையில் இறைவனைத் துயிலெழுப்பும் நோக்கில் பாடல்கள் இடம் பெறவில்லை எனலாம். ஆண்டாள் பள்ளியெழுச்சிப் பாடல்கள் பாடினார்கள். இதனால் ஆண்டவனையும் பிற ஆழ்வார்களையும் துயிலெழுப்பும் நோக்கில் திருப்பாவையில் சில பாடல்களை ஆண்டாள் பாடினராதல் வேண்டும்.

## விடியற் காட்சிகள்

பாவைப் பாடல்களில் இடம் பெற்றுள்ள புலரி வருணனைக் கூறுகள் பள்ளியெழுச்சிப் பாடல்களை நினைப்பூட்டுகின்றன.

(எ.டு) காசும் பிறப்பும் கைகலப்பக் கையோர்த்து

வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்

ஓசைப் படுத்த தயிர் அரவம்.... – திருப். 7

கீசு கீசென்று எங்கும் ஆனைச் சாத்தன் கலந்து

பேசின பேச்சரவம்..... – திருப். 7

கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்

ஏழில் இயம்ப இயம்பும் வெண் சங்கெங்கும் – திருவெம். 8

பாவைப் பாடல்கள் பாவை நோன்பினை அடியொற்றிப் பாடப்படுவன. எனினும் இவை பள்ளியெழுச்சிப் பாடல்களைப் போன்று வைகறையில் பாடப்படுவனவாகும். பாவைப் பாடல்களில் துயிலெழாய் எனும் துயிலெழுப்பும் குறிப்பு, பள்ளியெழுச்சிப் பாடல்களின் நோக்கத்தை நினைப்பூட்டுகிறது. மாணிக்கவாசகர் பாடிய திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களின் நோக்கத்தை நினைப்பூட்டுகிறது. மாணிக்கவாசகர் பாடிய திருப்பள்ளியெழுச்சிப் பாடலுக்குத் திரோதன சக்தி வெளிப்பட்டுத் தோன்றுதல் என்று தத்துவப் பொருள் உரைக்கப்படுவது போல இவர் அருளிய திருவெம்பாவைக்குச் சக்தியை வியந்த என்ற குறிப்பு உள்ளது. இக்காரணங்களாய்ப் பள்ளியெழுச்சிப் பாடல்களுக்கும் பாவைப் பாடல்களுக்கும் கருத்தமைப்பிலும் வளர்ச்சியிலும் தொடர்பும் தாக்கமும் உள்ளன என்று அறியலாம்.

## பள்ளியெழுச்சியின் வளர்ச்சியும் தொடர்ச்சியும்

தூது, உலா முதலிய சிற்றிலக்கியங்கள் பக்தி இலக்கியங்களாகத் தோன்றி, தத்துவ இலக்கியங்களாக மலர்ந்து, பின்னர் அக இலக்கியங்களாக மாறின. ஆனால் பள்ளியெழுச்சி இலக்கியங்கள் தத்துவ இலக்கியங்களாகத் தோன்றி, பக்தி இலக்கியங்களாக வளர்ந்து வந்துள்ளன. அகப் பொருளில் பாடுவதற்குப் பள்ளியெழுச்சியின் பொருண்மை இடந்தரவில்லை. எனவே பள்ளியெழுச்சி வகையைப் பிற்காலத்துச் சமய நூலாரும் போற்றினர்.

இவ்வகையில் 17ஆம் நூற்றாண்டில் தத்துவராயர் அருட்திருப்பள்ளியெழுச்சியையும், தாம் போற்றிய ஞானக் குருக்கள் மீது சிவப்பிரகாச சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி, சொரூபானந்த பரிபூரணப் பிரகாச நாயனார் திருப்பள்ளியெழுச்சி என்பவனவற்றையும் பாடினார். 18ஆம் நூற்றாண்டில் சிதம்பரநாத சுவாமிகள் முருகப் பெருமானின் மீது பள்ளியெழுச்சி பாடினார். 19ஆம் நூற்றாண்டில் அருட்பெருஞ்சோதி

திருப்பள்ளியெழுச்சியை வள்ளலாரும், 1959இல் தணிசேகர் திருப்பள்ளியெழுச்சியை வ.சு. செங்கல்வராய பிள்ளையும், திருவேங்கடவன் திருப்பள்ளியெழுச்சியை பாலசுந்தர முதலியாரும் பாடினார்.

தலமுறையிலான திருப்பள்ளியெழுச்சியில் சிதம்பர சுவாமிகள் திருப்போரூர் சந்நிதி முறையின் திருப்பள்ளியெழுச்சியும், பாரதியின் கம்பை சந்நிதியின் திருப்பள்ளியெழுச்சியும், முருகைய பங்கா காட்சியின் திருச்செந்தில் முருகன் சந்நிதி முறை திருப்பள்ளியெழுச்சியும், சிங்காரவேலு முதலியாரின் திருப்போரூர் இன்னிசைப் பாவின் திருப்பள்ளியெழுச்சியும் குறிப்பிடத்தக்கனவாகும்.

இறைவன் மீதும், சந்நிதி முன்பும் திருப்பள்ளியெழுச்சி பாடிய மரபோடு, நாட்டின் மீதும் மொழியின் மீதும், பள்ளியெழுச்சி பாடுகின்ற மரபு தற்காலத்தில் தோன்றியுள்ளது. நாட்டுப் பற்றின்றித் தற்காலத்தில் உறங்கிக் கிடந்த மக்களைத் துயிலெழுப்புவதை பாரதமாதாவின் மேல் ஏற்றி உருவகமாக பாரதமாதா திருப்பள்ளியெழுச்சியை பாரதியார் பாடினார். அ.கி. பரந்தாமனார் தமிழ்த்தாய் மீது தமிழ்ப்பெருந்தேவியின் திருப்பள்ளியெழுச்சி பாடியுள்ளார். இந்நூலில் பாரதியின் படைப்புத் தாக்கம் படிந்துள்ளதைக் காணலாம். 10ஆம் நூற்றாண்டு முதல் 17ஆம் நூற்றாண்டு வரையுள்ள நீண்டகால இடைவெளியில் பள்ளியெழுச்சிப் பாடல்கள் செல்வாக்குடன் இல்லை.

இதற்குக் காரணமாகச் சிலவற்றைக் கூறலாம். தலப் பெருமைகளையும், சமயக் கருத்தக்களையும், இறைவன் சிறப்புக்களையும் பிள்ளைத் தமிழ், உலா, தூது இலக்கிய வகைகளைப் போலப் பள்ளியெழுச்சி இலக்கியங்கள் மிக விரிவாகக் கூறவில்லை. மேலும் புலவர்தம் புலமை வெளிப்பாட்டுக்கு வாய்ப்பான களமாகப் பள்ளியெழுச்சியின் உருவமும் உள்ளடக்கமும் அமையவில்லை. பள்ளியெழுச்சி இலக்கிய வகையின் நீண்ட கால இடைவெளித் தளர்ச்சிக்கு இது ஒரு காரணமாகலாம்.

இறைவனைப் பாடுவதாகத் தோன்றிய பள்ளியெழுச்சி, பிள்ளைத்தமிழ், உலா போன்ற பிற சிற்றிலக்கியங்களைப் போன்று தலங்களையும், தத்துவங்களையும், தலைவர்களையும் பாடுகின்ற இலக்கிய வகையாக வளர்ந்துள்ளது. பிற சிற்றிலக்கிய வகைகளில் அகப்பொருள் விரவி வருவதுண்டு. ஆனால் பள்ளியெழுச்சியின் பொருண்மை அகப்பொருளுக்கு இடந்தரவில்லை. இவ்வளவு பழமை உடையதாய்ப் பல நூற்றாண்டுகளாக

மாறாத ஒரே வகையான அமைப்பு உடையதாய் விளங்கும் இலக்கிய வடிவம் வேறொன்றினைக் காண்பதரிது எனும் அறிஞர் கருத்து, பள்ளியெழுச்சி இலக்கிய வகையின் தனிச்சிறப்பையும், அச்சிறப்போடு கூடிய வளர்ச்சியின் தொடர்ச்சியையும் உணர்த்தி நிற்கின்றது.

## பள்ளியெழுச்சி வளர்நெறி

இளம்பூரணர், நச்சினார்க்கினியர் காலத்தில் பள்ளியெழுச்சி இலக்கியச் செல்வாக்குப் பெற்றிருந்தும் துயிலெடை நிலைக்கு வகுத்துள்ள உரையில் இவர்கள் பள்ளியெழுச்சி எனக் குறிப்பிட்டாரிலர். துயிலெடை நிலைக்குரிய சங்க இலக்கியக் கூறுகள் நச்சினார்க்கினியர் உரையில் படிந்துள்ளமை கருத்து வளர்ச்சியைக் காட்டுவதாகும்.

இறைவனைத் துயிலெழுப்புதல் பள்ளியெழுச்சி என்றும், மக்கள் தலைவரைத் துயிலெழுப்புதல் துயிலெடைநிலை என்றும் பு.வெ. மாலையாசிரியர் கருதியுள்ளார். பள்ளியெழுச்சிப் பாடல்கள் செல்வாக்குப் பெற்று வேரூன்றிய பின்னர்த் தோன்றிய பாட்டியல் நூல்களும் பள்ளியெழுச்சி என்னாது, துயிலெடை நிலை என்று சொல்கின்றன. இக்குறிப்பும் துயிலெடை நிலை மனிதனைப் பாடுதற்கும், பள்ளி யெழுச்சி இறைவனைப் பாடுதற்கும் உரியன என்ற கருத்தை அரண் செய்வதாகும்.

தொண்டரடிப் பொடியாழ்வாரிடம் எளிய கருத்துப் புலப்பாடாகவும், இயற்கை அனுபவ உணர்வாகவும் இருந்த பள்ளியெழுச்சிப் பாடல்கள் மாணிக்க வாசகரிடம் தத்துவக் கருத்துப் புலப்பாடாகவும், இறையனுபவ உணர்வாகவும் வளர்ந்துள்ளன. விடியல் வருணனை, புலரிக் காட்சிகள், இசைக் கருவிகள் இசைத்தல், வாழ்த்தல் எனும் கருத்தக் கூறுகள் சங்க இலக்கியம் தொட்டு வகைமைகளாக வளர்ந்து, பக்தி இலக்கியக் காலத்தில் இறைவனைத் துயிலெழுப்பும் நோக்கில் வகையாக உருப்பெற்றன.

பாவைப் பாடல்களும் பள்ளியெழுச்சிப் பாடல்களும் பொருள், இடம், காம் என்பனவற்றில் ஒட்டும் உறவும் கொண்டு, ஒன்றையொன்று சார்ந்து வந்துள்ளன. இயற்கையனுபவமாகவும், இறையனுபவமாகவும் மலர்ந்த பள்ளியெழுச்சிப் பாடல்கள், பிற்காலத்தில் தத்துவம், தலம், தலைவர்களைப் பாடும் வகையாக வளர்ந்தன. நாட்டையும், மொழியையும் பாடும் அளவிற்கு இன்று வாழ்கின்றன.

# தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்களின் முத்தமிழ் ஈடுபாடு

பா. வளன் அரசு
பாளையங்கோட்டை

## முன்னுரை

ஆற்றல்சால் அறிஞர் என்று சான்றோர் போற்றும் உத்தமதானபுரம் வேங்கட சாமிநாதன் அவர்கள் (1855 -1942) எண்பத்தேழு ஆண்டுகள் மாண்புற வாழ்ந்தவர் ஆவார். அரியலூர்ச் சடகோபன், குன்னம் சிதம்பரம், கார்குடி கசுதூரி ஆகியோரிடம் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுவந்த இளைஞர் வேங்கடராமன். செங்கணம் வருத்தாசலம் அவர்கள் ஆற்றுப்படுத்தியவாறு திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனாரிடம் (1870-1876) ஆறு ஆண்டுகள் முறையாகவும் நிறைவாகவும் தமிழ் பயின்றார்; தொடர்ந்து திருவாவடுதுறை ஆதீனத்துச் சுப்பிரமணிய தேசிகரிடம் (1876-1880) நான்காண்டுகள் தமிழ்க் கல்வி பெற்றார். 1880ஆம் ஆண்டு பெப்ருவரி 16ஆம் நாளன்று குடந்தைக் கல்லூரித் தமிழாசிரியர் ஆனார். 21.10.1880 அன்று சேலம் இராமசாமி அவர்களைச் சந்தித்தது உ.வே.சா.அவர்களின் வாழ்வில் திருப்புமுனை ஆனது. தமிழில் சிற்றிலக்கியங்கள் போன்று பழந்தமிழ் இலக்கியங்கள் பல உள்ளன என்பதை உணர்ந்தார். அவற்றைப் பதிப்பித்துப் பேணிக்காக்கத் திட்டமிட்டார். சீவக சிந்தாமணி முதலாய எழுபத்து நான்கு இலக்கியங்களைப் பதிப்பித்த பெருமை உ.வே.சா.அவர்களைச் சாரும்; பதினெட்டு உரைநடை நூல்களையும் வெளியிட்டுள்ளார். குடந்தைக் கல்லூரியில் பதின்மூன்று ஆண்டுகளும் (1880-1893) சென்னை மாநிலக் கல்லூரியில் இருபத்தாறு ஆண்டுகளும் (1893-1919) தில்லை மீனாட்சி கல்லூரியில் மூன்று ஆண்டுகளும் (1924-1927) ஆக மொத்தம் நாற்பத்திரண்டு ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர் உ.வே.சா.

**பதிப்பாசிரியர்**

பழந்தமிழ்ச் சுவடிகளைப் பதிப்பித்துத் தந்துள்ள உ.வே.சா. அவர்களின் வரலாறு ஆனந்த விகடன் இதழ் வாயிலாக (1940-1942) நூற்றிருபத்திரண்டு வாரங்கள் வெளிவந்தது. திருநெல்வேலி, தூத்துக்குடி, ஆழ்வார்திருநகரி, மழவராயனேந்தல், குன்றக்குடி, தென்காசி, மதுரை, திரிசிரபுரம், சேலம், சென்னை ஆகிய ஊர்களுக்கு நேரில் சென்று ஏடுகள் பலவற்றைத் தேடித்திரட்டினார். திருவைகுண்டம் கவிராயமிருந்து சேலம் இராமசாமி வாங்கி வைத்திருந்த சீவக சிந்தாமணி, குன்றக்குடி அருகில் உள்ள மிதிலைப்பட்டி சிற்றூரிலிருந்து கிடைத்த சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகியவை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. ஏடுகள் வைத்திருந்த கவிராயர் வீடுகளே கோவில்கள் எனவும் அங்கிருந்த ஏடுகளே விக்கிரகங்கள் எனவும் போற்றிப் புகழ்ந்து மகிழ்ந்தவர் உ.வே.சா.அறுபத்து நான்கு ஆண்டுகளில் (1878-1942) உ.வே.சா.பதிப்பித்த நூல்கள் நூற்றிரண்டு என்பர் சு.வேங்கடேசன், (உ.வே.சா. சமயம் கடந்த தமிழ், ப.28) சீவக சிந்தாமணியைப் பதிப்பித்துப் போற்றிய உ.வே.சா.அவர்களின் குறிப்புரை படித்து மகிழத்தக்கது மட்டுமன்று புகழத்தக்கதும் ஆகும்: தனிமையிலே திருத்தக்கதேவர் என்னை எங்கெல்லாமோ அழைத்துச் செல்வார். இராசமாபுரத்துக் காட்சிகளைக் காட்டுவார். சச்சந்தனின் அந்தப்புரத்திற்கு அழைத்துப் போவார். கட்டியங்காரனுடைய செயல்களை எடுத்துச் சொல்லுவார். சீவகன் பேசுவான், விளையாடுவான், வீரச்செயல் புரிவான், இன்பவிளையாட்டிலே ஈடுபட்டிருப்பான். காந்தருவதத்தை காட்சியளிப்பாள். குணமாலை தோன்றுவாள். என் உடம்புதான் இரவில் தனியாக இருக்குமேயன்றி என் மனம் சிந்தாமணிப் பிரபஞ்சத்தில் விரிந்த இடங்களையும் நீண்ட கால நிகழ்ச்சிகளையும் அளவிட்டு இன்புறும். இத்தகைய ஈடுபாட்டுடன் சீவக சிந்தாமணிக் காப்பியத்தைச் சுவைத்துப் படித்து உணர்ந்து பதிப்பித்துள்ளார். உ.வே.சா.பதிப்புத்துறையில் ஆர்வத்தடன் விழைந்து உழைத்த உ.வே.சா. அந்நூல்களின் சிறப்பைப் பாராட்டியும் இறையருளை நினைந்து போற்றியும் எழுதிய பாக்கள் பலவாகும். **தமிழ்ப் பாமஞ்சரியில்** விநாயகர், முருகன், சிவபெருமான், அம்பிகை, சரசுவதி துதிப் பாடல்களும் மொழிபெயர்ப்புப் பாக்களுடன் திருத்தொண்டர் மற்றும் பழகிய பெரியோர் பற்றிய பாக்களும் இடம் பெற்றுள்ளன. **கயற்கண்ணி மாலையில்**

நான்கு சிற்றிலக்கியங்கள் அமைந்துள்ளன. மணிமேகலை, குறுந்தொகை ஆகியவற்றுக்கு உ.வே.சா.வரைந்த உரைகள் அவரை ஓர் உரையாசிரியராகத் துலங்கச் செய்தன. புறநானூற்றுக்குக் குறிப்புரையும் சங்க இலக்கியங்கள் முதலியவற்றுக்கு முகவுரைகளும் நல்கியவர் தமிழ்த்தாத்தா உ.வே.சா.

## முத்தமிழ் ஈடுபாடு

பாரதிய மாநாட்டு வரவேற்புரை ஆற்றிய உ.வே.சா. தமிழ் மொழியின் தன்னிகரற்ற சிறப்பினை விரித்துரைத்துள்ளார். தமிழ் தொன்மைச் சிறப்புமிக்கது. சங்க நூல்கள் என்று சொல்லப்படும் நூல்கள் இரண்டாயிரம் வருடங்களுக்குமுன் இயற்றப்படடவை. பண்டைத் தமிழ் நூல்களில் இயற்கை அழகின் வருணனை அதிகம். சங்க இலக்கியத்தில் தன்மை நவிற்சி அணியே இருக்கிறது. சங்க இலக்கியத்தில் காதல், வீரம், கருணை, சோகம் ஆகிய சுவைகள் அங்கங்கே அமைந்து விளங்குகின்றன. தமிழர் நிலங்களைப் பகுத்த பகுப்பும் காவியக் கதியை வரையறுக்கும் இலக்கணங்களும் மற்ற மொழிகளுக்குப் புதியவை என விளம்பியுள்ளார். மேலும், நாட்டை ஆளும் முறை, நகரத்தின் அமைப்பு, பாதுகாப்பு, ஒழுக்கங்கள், தெய்வவழிபாடு ஆகியவற்றைப் பற்றித் தமிழ் நூல்களில் உள்ள செய்திகளைப் பார்த்தால் தமிழர் நாகரிக வாழ்வை நினைக்குந்தோறும் வியப்பை உண்டாக்குகிறது என்கிறார்.

### இசைத் தமிழ்

**பண்டைத் தமிழரின் இசையும் இசைக் கருவிகளும்** என்னும் தலைப்பில் உ.வே.சா. எழுதிய கட்டுரை எண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழிசை பற்றி அறிவிக்கும் கருவூலமாகத் திகழ்கிறது. இசையின் பெருமையை உணர்ந்தே முத்தமிழுள் இசைத் தமிழை நடுநாயகமாக அமைத்துள்ளனர் ஆன்றோர். இசை எல்லா உயிர்க்கும் இன்பம் நல்கும். வண்டுகள் இசைபாட அரும்புகள் மலரும், பாம்பு இசைக்கு அடங்கும். யானை வீணையின் இசைக்கு அடங்கிவிடும். தினைப்புனம் காக்கும்போது இளம்பெண் குறிஞ்சிப்பண் இசைத்திருப்பாள். அங்கே வந்த யானை மயங்கிக் கதிரை உண்ணாமல் நிற்கும். இச்செய்தி அகநானூற்றில் இடம் பெற்றுள்ளது. பெருங்கதையில் உதயணன் நளகிரி என்ற மதம்பிடித்த யானையை

வீணைவாசித்து அடக்கி அதன்மேல் ஏறி, ஆயுதங்களை எடுத்துத்தர அதனையே ஏவி ஊர்ந்தான் என்று ஒருசெய்தி காணப்படுகிறது. என்று புலமைநலத்துடன் கூறியுள்ளார். மேலும், பசுக்கள் இசையில் வயப்படுகின்றன என்பதைக் கண்ணன் கதை விளக்கும். ஆனாய நாயனாருடைய . புராணத்தும் இத்தகைய செய்திகள் காணப்படுகின்றன. அசுணமா என்ற பறவை இன்னா இசையைச் கேட்டபின் மூர்ச்சையுற்று விழுந்துவிடும். தெம்மாங்கு, தாலாட்டு போன்ற இசைக் கலைக்கு விலங்குகளும் குழந்தைகளும் மயங்கும். வன்மன்க் கள்வரும் தம்கொடுஞ்செயலை மறந்து இசைவயத்தர் ஆவர். சீவக சிந்தாமணிக் காப்பியத் தலைவன் சீவசன் இசைபாடி, சுரமஞ்சரி என்ற பெண்ணைத் தன் வசப்படுத்தினான் என்கிறார்.

பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம், இசை நுணுக்கம், பஞ்ச மரபு, தாளசமுத்திரம், சச்ச புடவெண்பா, இந்திரகாளியம், பதினாறுபடலம், தாளவகைபோத்து, இசைத்தமிழ் செய்யும் முறை, கோவை முதலிய இசை இலக்கண நூல்கள் அந்நாளில் இருந்தன. பிற்காலத்தில் எழுந்த சுத்தானந்த பிரகாசம் நூலும் இசை இலக்கணத்தை இயம்பியதாகும். பழைய இசைத்தமிழ் இலக்கியங்கள் சிலப்பதிகாரம், பரிபாடல் ஆகியனவாகும். குறவஞ்சி, பள்ளு, சிந்து ஆகிய பிற்காலப் பிரபந்தங்களும் இசையைச் சேர்ந்தனவே என்பர்.

இசையில் பண்கள் என்றும் திறங்கள் என்றும் இருவகை உண்டு. பண்கள் ஏழு நரம்புகள் கொண்டன. பண்களிலிருந்து திறங்கள் பிறக்கும். அவை இக்காலத்தின் சன்யராங்கள் என்று அழைக்கப்படும். இப்படிப் பிறக்கும் பண்ணும் திறமுமாம் இசைவகைகள் தொகுக்கப்பட்டு 11,999 என்று கூறப்படுகின்றன என்பர்.

இசைக்கருவிகள் கீதாங்கம், திருத்தசாங்கம், உபயாங்கம் என மூவகைப்படும். இயற்கை மூலமாக அறிந்து அமைத்தது பற்றிக் குழலே முதல் இசைக்கருவி ஆயிற்று. குழலில் பலவகை உண்டு. யாழ் வகைகளும் பல உண்டு. தண்ணுமை வகைகளும் பல. பாணர் என்பார் இசைவல்லார் என்கிறார்.

பேரியாழ் இருபத்தொரு நரம்புகள் உடையது. பத்தொன்பது நரம்புகளை உடையது மகரயாழ். பதினான்கு நரம்புகளை உடையது சகோடயாழ்.

ஏழு சுவரமும் கொண்டவை சம்பூரணராகம். அதுவே பண்ணாம். வடமொழியில் மேளகர்த்தா என்று கூறப்படுவதும் அதுவே. குரல் துத்தம் கைக்கிளை உழை, இளி, விளரி, தாரம் என்று தமிழில் வழங்குவதையே வடமொழியில் சட்சம், ரிசபம், காந்தாரம், மத்யமம், பஞ்சமம், தைவதம், நிசாதம், என்று கூறுவர் என விரித்துரைத்துள்ளார்.

## நாடகத் தமிழ்

நாடக இலக்கியத்தின் சிறப்பு, நாடக இலக்கணங்கள், நாடக வகைகள், பிற்காலத்து நாடகங்கள் ஆகிய நான்கு கூறுகளையும் வீறுடன் விளம்புகிறார் உ.வே.சா. பஞ்சிபடா நூலே, பலர் நெருடாப் பாவே, கண்டு எஞ்சி அழுக்கேறா வியற்றகுகலையே என்னும் தமிழ் விடுதூது தரும் செய்தியை விளக்குகிறார். நூல் என்பது இலக்கணத்தையும், பா என்பது இலக்கியத்தையும், கலை என்பது இசை, நாடகம் ஆகியவற்றையும் குறிக்கும்.

பரதம், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், பஞ்சமரபு, பரதசேனாபதியம், மதிவாணன் நாடகத் தமிழ் ஆகியன நாடக இலக்கணம் நவிலும் நூல்கள். சாந்திக் கூத்து என்பது நான்கு வகைப்படும். சொக்க நிருத்தம், மெய்க் கூத்து, அவிநயக்கூத்து, நாடகம் என்பன அவை.

நாடகம் பலவகைப்படும், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு வகைப் பொருள்களை உள்ளுறையாக உடையது நாடகம். அறம்பொருளாகத் தெய்வமும் மானிடரும் தலைவராக வரும் நாடகத்தைச் **சாத்துவதி** என்பர். பொருள்பற்றிய வரலாறுகளைக் கூறுவதால் வீரராகிய மானிடர் தலைவராக வருவது **ஆடிபடி** என்னும் நாடகம். காமம் பொருளாக இன்பச்சுவை தலைமை பெறவரும் அமைப்பை உடையதும் காமுகராகிய மக்கள் தலைவருமாக வருவது கைசிகி ஆகும். கூத்துத்தலைவனாக நடனும்

நடியும் சேர்ந்து அவிநயங்களோடும் கூற்றுக்களோடும் நடத்துவது பாரதி என்னும் நாடகமாடும எனகிறார். உ.வே.சா.

திக்குறளில் உள்ள காமத்துப்பால் முழுவதும் கூற்றுவகையாக அமைந்தது. ஆதலின் அப்பகுதியை நரடக இலக்கியத்தின் பால் பகுக்கலாம். நூல்கள் பிற்காலத்து நாடகப் பிரபந்தமாகும். குறவஞ்சி ,பள்ளு, நொண்டி என்பவற்றையும் நாடக வகைகளுள் சேர்த்தல் பொருந்தும். இச்சிற்றிலக்கியங்கள் பெரிதும் புனைந்துரை வகையைச் சேர்ந்தன என்பர்.

**நிறைவுரை**

தவறுகளைப் போக்குவது, அறிவூட்டும் இயல்புஉடையைது, குறிப்புப்பொருளைத் தருவது, சுற்றம் காக்கும் கருவியாக விளங்குவது ஆகிய பயன்பாட்டுச் சிறப்புடன் எழுதியும் பேசியும் வாழ்ந்த பெருந்தகை தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்கள் வித்துவான் தியாகராசர் தாம் மேற்கொண்டிருந்த கல்லூரி ஆசிரியர் பொறுப்பை உ.வே.சா. அவர்களுக்கு வழங்கினார். அதனை நினைந்து நன்றிபாராட்டும் வகையில் தம் இல்லத்துக்கு **தியாகராச நிலையம்** என்று பெயரிட்டார். மேலும் தியாகராசரின் ஆளுமைத் திறனையும் வாழ்வுச் சூழலையும் விரித்துரைத்திடும் வகையில் வித்துவான் தியாகராசர் என்னும் நூலை எழுதியுள்ளார். தனக்கு விழுமிய வகையில் தமிழ் பயிற்றுவித்த மகா வித்துவான் மீனாட்சி சுந்தரனாரின் அறுபத்தோராண்டு வாழ்வியலை (1815-1876) மிக விரிவாக இரு பிரிவுகளாக எழுதி வெளியிட்டுள்ளார். இருபத்தெட்டுக் காப்பியங்களும் நாற்பத்தைந்து சிற்றிலக்கியங்களும் பல்வேறு தனிப்பாடல்களும் இயற்றிய மகாவித்துவான் வருவாய்க்கு விஞ்சிய சொல்லால் பெரும்பாலும் வறுமையுடன் வாழ்ந்தார் என விண்டுரைத்துள்ளார். தமிழ்த் தாத்தா உ.வே.சா.வின் தமிழ்த்தொண்டுகளையும் பேருழைப்பையும் ஆய்வுத் திறத்தையும் பாராட்டிக் கவிமணி தேசிக விநாயகம் பாடிய வெண்பா குறிப்பிடத்தக்க சிறப்புமிக்கது ஆகும்.

*கண்ணும் சடையாமல் கையும் தளராமல்*
*உண்ணப் பசியெழுவ(து) ஓராமல் எண்ணியெண்ணிச்*
*செந்தமிழ்த் தாய்க்குச் செய்த திருத்தொண்டுக்கு*
*இந்நிலத்(து) உண்டோ இணை.*

மூதறிஞர். வ.சுப.மாணிக்கம் தம் முனைவர் பட்ட ஆய்வு ஏடான தமிழ்க் காதல் என்னும் நூலைத் தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்களுக்குப் படையல் செய்து போற்றியுள்ளது ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது:-

*பார்காத்தார் ஆயிரம்பேர் ; பசித்தார்க் காகப்*
*பயிர்காத்தார் ஆயிரம்பேர்; பாலர்க காக*

*மார்காத்தார் ஆயிரம்பேர் வாழ்ந்த நாட்டில்*
*மணங்காத்த தமிழ்த்தாய் "என் உடைமை யெல்லாம்*
*யார்காத்தார்?" எனக்கேட்க, ஒருவன் அம்மா*
*யான்காப்பேன் எனவெழுந்தான் சாமி நாதன்*
*நீர்காத்த தமிழகத்தார் நெஞ்சில் உள்ளான்*
*நிலைகாத்த மலைமிமய நெற்றி மேலான்*

*பொய்யதா தமிழ்க்குமரி ஈன்ற சாமி!*
*போகாத புகழ்க்கன்னி மணந்த நாத!*
*செய்யதா மொழித்தொண்டு செய்த ஐய!*
*சிறுகாத நெஞ்சத்தேம் வணங்கு செம்மல்!*
*எய்யதா திருவடியால் எண்பத் தாண்டும்*
*இளையாத உள்ளத்தால் எங்கும் சென்று*
*நெய்யதா தொன்னூல்கள் நிலைக்க வைத்த*
*நீங்கதா தமிழ்க்குயிரே! நின்தாள் வாழ்க.*

# நாகை மாவட்ட மீனவர்களின் குழந்தைச் சடங்குகள்

ஆ. திருமேனி
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

மனித இனத்தை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்வது குழந்தைப் பேறாகும். அந்தக் குழந்தைச் செல்வம் மிகவும் இன்றியமையாத ஒரு செல்வமாகும். மனிதன் திருமணம் ஆனவுடன் குழந்தைக்காகப் பல கோயில் குளங்களுக்குச் சென்று வேண்டிக்கொள்ளும் நிலையை இன்றும் கண்கூடாகக் காணலாம். குழந்தைச்செல்வம் கிடைத்தவுடன் தம்பதிகள் அடையும் மகிழ்ச்சி அளவிட முடியாதது.

குழந்தை பிறந்த மூன்றாவது அல்லது ஐந்தாவது மாதத்தில் கோயிலுக்குச் குழந்தையை அழைத்துச் செல்வது வழக்கம். முதலில் அவரவர் குலதெய்வத்திற்குக் குழந்தையை அழைத்துச் செல்வர். அதன் பின்னர் தாம் வேண்டிய கோயிலுக்குச் செல்வது தமிழர்களிடையே நடைமுறையிலுள்ள வழக்காறாகும். எல்லாச் சமூகத்தாரும் பிறந்த நாளிலிருந்து ஓராண்டு வரை பல சடங்கு முறைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

குழந்தைப்பேற்றினைப் போற்றும் வகையில் நம் முன்னோர்கள் தங்கள் இலக்கியங்களில் பல இடங்களில் சுட்டிச் செல்கின்றனர். புறநானூற்றில் பாண்டியன் அறிவுடைநம்பி,

*படைப்புப் பலபடைத்துப் பலரோடு உண்ணும்*
*உடைப்பெருஞ் செல்வராயினும்*
*குறுகுறு நடந்து சிறுகை நீட்டி*
*இட்டும் தொட்டும் கவ்வியும் துழன்றும்*
*நெய்யுடை அடிசில் மெய்ப்பட விதிர்த்து*
*மயக்குறு மக்களைப் பெறாதோர்க்கு*
*பயக்குறை இல்லை தாம் வாழும் நாளே.* (புறம்.188)

மனித இனத்தை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்வது குழந்தைப் பேறாகும். அந்தக் குழந்தைச் செல்வம் மிகவும் இன்றியமையாத ஒரு செல்வமாகும். மனிதன் திருமணம் ஆனவுடன் குழந்தைக்காகப் பல கோயில் குளங்களுக்குச் சென்று வேண்டிக்கொள்ளும் நிலையை இன்றும் கண்கூடாகக் காணலாம். குழந்தைச்செல்வம் கிடைத்தவுடன் தம்பதிகள் அடையும் மகிழ்ச்சி அளவிட முடியாதது.

குழந்தை பிறந்த மூன்றாவது அல்லது ஐந்தாவது மாதத்தில் கோயிலுக்குச் குழந்தையை அழைத்துச் செல்வது வழக்கம். முதலில் அவரவர் குலதெய்வத்திற்குக் குழந்தையை அழைத்துச் செல்வர். அதன் பின்னர் தாம் வேண்டிய கோயிலுக்குச் செல்வது தமிழர்களிடையே நடைமுறையிலுள்ள வழக்காறாகும். எல்லாச் சமூகத்தாரும் பிறந்த நாளிலிருந்து ஓராண்டு வரை பல சடங்கு முறைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

குழந்தைப்பேற்றினைப் போற்றும் வகையில் நம் முன்னோர்கள் தங்கள் இலக்கியங்களில் பல இடங்களில் சுட்டிச் செல்கின்றனர். புறநானூற்றில் பாண்டியன் அறிவுடைநம்பி,

*படைப்புப் பலபடைத்துப் பலரோடு உண்ணும்*
*உடைப்பெருஞ் செல்வராயினும்*
*குறுகுறு நடந்து சிறுகை நீட்டி*
*இட்டும் தொட்டும் கவ்வியும் துழன்றும்*
*நெய்யுடை அடிசில் மெய்ப்பட விதிர்த்து*
*மயக்குறு மக்களைப் பெறாதோர்க்கு*
*பயக்குறை இல்லை தாம் வாழும் நாளே.* (புறம்.188)

எனக் குழந்தை இல்லா வாழ்க்கை வீணாகக் கழிந்ததாகக் கொள்ளப்படும் என்கிறார். வள்ளுவரும் ஒருபடி மேலே சென்று,

''*குழலினிது யாழினிது என்பர்தம் மக்கள்*
*மழலைச் சொல் கேளாதவர்.* (குறள். 66)

என்பர். இத்தகைய குழந்தைச் செல்வத்தினை ஒல்லும் வகையில் நாட்டுப்புற

மக்களும் தங்கள் வாழ்வில் குழந்தைப் பேற்றிற்கான நுண்ணிய இடத்தை நல்கியுள்ளனர்.

## குழந்தைச் சடங்குகள்

அறிவியல் வளரவளர சடங்குகள் கொஞ்சம் கொஞ்சமாக மக்களை விட்டு விலகிச் செல்கிறது. குழந்தைச் சடங்கிற்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கும் நிலையைக் காணலாம். இதற்குக் காரணம் வம்சம் தழைக்க வேண்டும் என்பதேயாகும். மற்ற சடங்குகள் ஒரு பொய் அளவில் மட்டும் செய்கின்றனர். குழந்தைச் சடங்கு ஓர் எதிர்பார்ப்போடு நிகழ்த்தப்படுகின்றது. குழந்தை வளர்ந்து கல்வியில் மேன்மை அடைந்து எல்லோரும் போற்றும் அளவுக்கு வளர்ந்தால் அது பெற்றோர்க்குப் பெருமை சேர்ப்பதாகும். இதனால் குழந்தைக்குச் சடங்கு செய்யும் பொழுது பெரியோர்கள் கல்வியில் மேன்மை அடைய வேண்டும் என்று சொல்லி சேனைபோடும் ஒரு சடங்கைச் செய்து வருகின்றனர். மீனவக் குழந்தைகளுக்குச் செய்யும் சடங்குகள் பின்வருமாறு அமைந்துள்ளதனைக் காணமுடிகின்றது.

1. **நஞ்சுக்கொடி வழிபாடு**
2. **சேனை போடுதல்**
3. **பெயர் சூட்டுதல்**
4. **காது குத்துதல் முடியெடுத்தல்**

## 1. நஞ்சுக்கொடி வழிபாடு

குழந்தை பிறந்தவுடன் மருத்துவச்சி பிறந்த குழந்தையின் நஞ்சுக்கொடியை அறுத்து வீட்டின் தோட்டத்தில் அதைப் புதைக்கச் சொல்லுவாள். அவர்களும் அவ்வாறு செய்வார்கள். புதைத்த இடத்தைப் பத்திரமாகப் பாதுகாத்துவருவர்.

குழந்தையைப் பெற்றெடுத்த தாய்க்கு. வண்ணாத்தி புடவை கொடுப்பாள். அதை உடுத்திக் கொள்கிறாள். அன்றுமுதல் அவள் தீட்டு உடையுவளாகக் கருதப்படுவாள். தீட்டு உடை நாளில் தீயு சக்திகள் எளிதில் அவர்களுடைய உடலில் சென்று துன்புறுத்தும் என்பதால் தனியே படுக்க

வைக்கும்போது காவலுக்காக உலக்கை, வேப்பிலை, கரித்துண்டு, இரும்பாலான பொருள் ஆகியவற்றை வைக்கின்றனர். இச்செயல்பாட்டினை,

*"புனிறு நாறு செவிலியொடு புதல்வன்துஞ்ச*
*ஐயவி அணிந்த நெய்யாட்டு ஈரணிப்*
*பசுநெய் கூர்ந்த மென்மை யாக்கை" (நற் 40)*

என்னும் நற்றிணைப் பாடலடிகளில் புலப்படுத்தக் காணலாம்.

மீனவக் கிராமங்களில் பிறக்கும் குழந்தைகளுக்கு மருத்துவச்சி மகப்பேறு பார்க்கின்றாள். இவர்கள் வேறு சமூகததைச் சார்ந்தவர்கள் அல்ல; அவர்களுடைய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தான். குழந்தை எப்பொழுது பிறக்கும் என்பதைச் சொன்னால் சொன்ன மாதிரியே பிறக்குமாம். விஞ்ஞானம் வளர்ந்தாலும் அனுபவத்தின் மூலமாக அவர்கள் கணிக்கின்றனர். நாகை மாவட்ட மீனவக் கிராமங்களில் மருத்துவச்சிகள் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். குழந்தை பிறந்த 9ஆம் நாள் வீட்டுக்கு வந்து தீட்டையும் கழிக்கின்றனர். மருத்துவச்சியோடு, அம்மடத்தியை கூடவே அழைத்து வருவர். இவர்கள் பெண்ணையும் குழந்தையையும் அழைத்து தலைக்கு என்ணெய்த் தேய்த்துக் குளிப்பாட்டுவர். பின்னர் இவர்களுடன் வந்த பெண்களையும் எண்ணெய் தேய்த்துக் குளிக்கச் சொல்லுவர். அனைவரும் தலைகுளித்துவிட்டால் தீட்டு கழிந்துவிடும் என்பது மீனவர்களின் நம்பிக்கையாகும்.

புதைத்த நஞ்சுக்கொடியினைக் குழந்தைக்குப் பெயர்சூட்டும் நாளன்று வழிபடுவர். இவ்வழிபாட்டுக்குக் காரணமாகச் சொல்லப்படுவது வழிவழித் தோன்றல்கள் உருவாக வேண்டுமென்பதேயாகும். தாயிடம் இருந்து உணவைப் பெறுவதற்குக் கருவியாகவும் உயிர்வாழ்வதற்கு மூலமாகவும் அமைந்துள்ளதால் நஞ்சுக்கொடியைப் போற்றி வழிபடுகின்றனர்.

## சேனை போடுதல்

சேனை போடுதல் என்பது குழந்தைக்கு இனிப்பான

சீனித்தண்ணியை நாவில் தொட்டு வைப்பதாகும். இதற்குக் காரணம் உலகத்தில் பிறந்தவுடன் அதன் வாழ்க்கை என்றும் இனிமையாக இருக்கவேண்டும் என்பதற்காக இச்சடங்கு செய்யப்படுகின்றது. இச்சடங்கினை வயதில் மூத்தவர்கள். கல்வி அல்லது பொருளாதாரத்தில் மேன்மையடைந்தவர்கள் மேற்கொள்வது வழக்கம். குழந்தை அவர்களைப் போல நீண்ட ஆயுளும், கல்வியில் சிறந்தும், வசதிவாய்ப்பில் உயர்ந்தும் வளர வேண்டும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இந்நிகழ்ச்சி மீனவ மக்களிடம் நடைபெறுகின்றது.

## பெயர் சூட்டுதல்

மனிதனின் சமூக வளர்ச்சியில் பெயரிடுதலும் ஒன்றாகும். மனிதனுக்கு மட்டுமே தனித்தனியாக அடையாளங்கள் இடப்படுகின்றது. பிறவற்றிற்குப் பொதுவான அல்லது குழுவான அடையாளங்களே இடப்படுகின்றன. பெயரிடுவது என்பது ஒருவரிடமிருந்து மற்றவரை அடையாளப்படுத்துவதற்காகவே யாகும். பெயரிடுவதில் ஒரு நாட்டின், ஓர் இனத்தின், ஒரு சமுதாயத்தின் பண்பாட்டின் வரலாற்றினை அறிந்து கொள்ளலாம். எனவே, பெயரிடுவது என்பது ஒவ்வொரு சமுதாயத்திற்கும் முக்கியமானதாகும். எனவே, குழந்தைச் சடங்கில் பெயரிடும் முறை சிறப்பாகச் செய்யப்படுகின்றது. நாகை மாவட்ட மீனவர்கள் குழந்தை பிறந்த 16–ஆம் நாள் இரவு பெயர் சூட்டல் விழா செய்கின்றனர் மாப்பிள்ளை வீட்டுக்குச் சொந்தமானவர்கள் அனைவரும் பெண்ணின் வீட்டுக்கு வரும்போது குழந்தைக்குத் தேவையான கருப்பு வளையல், செயின், பழம், வெற்றிலை பாக்கு, வெள்ளெருக்கம் வேர் இவைகளை எடுத்து வருவார்கள். இதைப் பெண்ணின் தாய் தந்தையிடம் கொடுப்பார்கள். இதை வாங்கிக் கொண்டு குலத்தெய்வத்துக்கு முதலில் படைப்பர். பின்னர் குழந்தைகளை அச்சுறுத்தும் பேச்சாயி பெரியாச்சிக்கு அவர்கள் விரும்பும் கொழுக்கட்டை, புடி (மாவினால் செய்து வேகவைக்கப்பட்ட விளக்கு) முருங்கைக்கீரை, கருவாட்டுக் குழம்பு, கோழிக்கறி, முட்டை ஆகியவற்றை மருத்துவச்சி படைப்பாள். இதனைக் கணவனை இழந்த பெண்களும் செய்வது உண்டு.

சாமிக்குப் படைக்கும் பொழுது முறம், அம்மி இடம்பெறும். முறத்தில் உணவினைப் போட்டு காட்டாயி, மோட்டாயி தெய்வத்துக்கு வீட்டின் மேற்புறத்தில் எடுத்துக்காட்டுவர். அம்மியை எடுத்து வீட்டின் உச்சியில்

காட்டுவர். அதேபோல் குழந்தையையும் எடுத்துக்காட்டுவர்.

முறத்தில் படைத்த உணவினைப் பெண்களுக்கு மட்டும் கொடுப்பர். இதை உண்டால் பிள்ளை இல்லாதவர்களுக்கும் பிள்ளை பிறக்கும் என மீனவர்கள் நம்புகின்றனர். குழந்தையைத் தொட்டிலில் இடும்பொழுது தாய்மாமன் குழந்தைக்குப் பெயரிடுவர். பிறகு அனைவரும உணவு உண்பார்கள். இதே பெயர்சூட்டலில் நடைபெறும் நிகழ்வாகும்.

## காதுகுத்தல் முடி செலுத்துதல்

குழந்தை பிறந்து ஓராண்டு கழிந்த பின்னர் காதுகுத்துவதும், முடி செலுத்துவதும் எல்லாச் சமூகத்திலும் நிகழும் ஒரு சடங்காகும். நாகை மாவட்ட மீனவர்கள் இச்சடங்கினை விரிவாகச் செய்கின்றனர்.

சீர்காழி வட்டம், மடவாய்மேடு கிராமத்தில் மீனவர்கள் வீரனார்க்குப் படைக்கும்பொழுது படைக்கும் பொருளுக்கு எண்ணிக்கையைக் கையாளுகின்றனர். அப்பொழுது 29 மாவிளக்கு, 29 பாக்கு, 29 வெற்றிலை, பட்டு இவைகளை வைத்து குலதெய்வத்துக்குப் படைப்பர். பிறகு கோயிலில் காதுகுத்துவர். இதனையே தே. ஞானசேகரன் "தீய ஆவிகள் உறையுமிடங்களில் குழந்தைக்கு மொட்டையடிப்பதும், பலியிடுவதும், காதுகுத்துவதும் முன்னர் இச்சடங்கினை மேற்கொண்டிருக்க வேண்டும் " என்பர்.

பின்னர், பால் பூசை, பலிபூசை இரண்டினைச் செய்வர். பால்பூசை என்பது பொங்கல் பழம் வெற்றிலைப் பாக்கு தேங்காய் இவைகளைத் தலைவாழையில் போட்டுத் தீபம் ஏற்றி வழிபடுவர். இதனைப் பால்பூசை என்று கூறுவர்.

பலிபூசை என்பது ஆடு, கோழி இவைகளைக் குளிப்பாட்டி மஞ்சள் துணி கட்டி மாலை போட்டு அதன் மீது தண்ணீர் ஊற்றுவர். தெய்வத்தின் அனுமதி கிடைத்தவுடன் அவற்றை வெட்டிச் சமைப்பர். அதோடு கள், சாராயம் ஆகியவற்றையும் சேர்த்துப் படைப்பர். இதனைப் பலிபூசை என்பர்.

# சங்கதி வெளிப்படுத்தும் பாலின பாகுபாடு

வீ. ரேணுகா தேவி
மதுரை

உனக்கான உலகம் விஸ்தாரமானது. உலகின் இன்பங்கள், இயல்புகள், ஏன் இந்த உலகமே உனக்கானது தான். உனக்குப் போக மிஞ்சியது தான் மற்றவர்களுக்கு. நீ வாழப்பிறந்தவன். ஆளப் பிறந்தவன்.

*ஏனென்றால் நீ ஆண்!*
*ஆம்! நீ ஒரு ஆண்!*

உன் உலகம் குறுகலானது, உலகம் உனக்கு இருள் மயமானது. மற்றவர்கள் அனுபவித்து எஞ்சிய மிச்ச மீதங்களே உனக்கானவை. நீ அடிமையாகப் பிறந்தவள். ஆண் மகனின் போகப் பொருளாய் அடங்கிப் போகப் பிறந்தவள்;

*ஏனென்றால் நீ பெண்!*
*ஈஆம் நீ ஒரு பெண்!*

காலங்காலமாய் இந்தப் பாலினப் பாகுபாடு முகத்தில் அறைந்து சொல்லப்படும் உண்மை. இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகளாவிய அளவில் அடிமைச் சமுதாயமாகவே இருத்தி வைக்கப்பட்டிருக்கும் பெண்ணினம் மாற்ற முடியாத நியதியாக, மாறத் தயாராக இருந்தாலும் காலுக்குக் கீழே தள்ளி மிதிக்கத் தயாராய் இருக்கும் ஆணினம். இது தான் நியதி என்றே என்றைக்கும் சொல்லப்பட்டுக் கொண்டிருக்கும் வறட்டுவாதம் (பாலின பாகுபாடும் சமூக அடையாளங்களும், பதிப்புரை, 2009).

இந்தியச் சூழலில் ஒரு பெண் நல்ல மனைவியாக, தாயாக இருந்தாக வேண்டும். இது சமுதாயம் வரையறுத்துள்ள விதி. திருவள்ளுவரும்

*தற்காத்துத் தற்கொண்டான் பேணித்தகை சான்ற*
*சொற்காத்துச் சோர்விலாள் பெண்.* (குறள் : 56)

பெண் என்பவள் தன் கற்பையும் கணவனையும் காத்து நாவடக்கத்துடன் இருக்க வேண்டியவள் என்று தானே பெண்ணுக்கான இலக்கணத்தை வரையறை செய்கிறார்.

இது சமுதாயம் செய்த விதி. இவ்வாறு இல்லாமல் போனால் சமுதாயம் அவளைக் குறை கூறும். மேல்தட்டு, நடுத்தரவர்க்க, உழைக்கும், நகரத்து,கிராமத்து பெண்கள் அனைவருக்கும் பொதுவானதாக இது விதிக்கப்படடுள்ளது. நம் இலக்கியங்களும் இவ்வரையறைகளுக்கு உட்பட்டு தான் தம் கதாபாத்திரங்களைப் படைக்கின்றன. பெரும்பாலான இலக்கியங்களின் பாடுபொருளாக அமைகின்றவர்கள் ஆண்களே; அவர்களை ஒட்டி, கதையை நகர்த்துவதர்க்காக படைக்கப்படுபவர்களே பெண்கள்.

சாதி, மதம், மொழி போன்றவையும் ஆண்மை, பெண்மை குறித்து கருத்துருவாக்கத்தின் மேல் தாக்கம் செலுத்துகின்றன. பாலின வேறுபாட்டினை அடிப்படையாகக் கொண்ட இந்தக் கருத்துருவாக்கமானது, சாதிய, வர்க்க, மத, பாலினத் தேர்வுகளை நிர்ணயிக்கின்றனவா? அல்லது இந்த பிற அமைப்புகள்தான் பாலின வேறுபாடு பற்றிய வரையறைகளை உள்ளடக்கிய கருத்துருவாக்கத்தைத் தீர்மானிக்கின்றனவா? (வ. கீதா, 2009:16) என்பது ஒரு கடினமான முக்கியமான தீர்வு வேண்டிய கேள்வியாக முன் வைக்கப்படுகின்றது.

ஆண்தன்மை, பெண்தன்மை பற்றிய வரையறைகளையும் இவை தொடர்பான சமூகக்கட்டுமானங்களையும் நாம் ஆராய முற்படும் போது பாலின வரையறைகள் உடல் சார்ந்தவையா? சமூக செயல்பாடுகளால் உருவாக்கப்படுபவையா? என்ற கேள்விக்கு பதில் அறிய வேண்டிய நிலையில் பாமாவின் சங்கதி நாவல் பாலினப் பாகுபாடு, சமூகம் சார்ந்து பெண்ணின் மீது எவ்வாறு சுமத்தப்படுகின்றது என்பதற்குச் சான்றாக அமைகின்றது.

ஆண்பால், பெண்பால் என்பன இயல்பாக அமைந்துள்ள வேறுபாடுகளைக் குறிப்பதாகவும், அவற்றைக் காரணங்களாகக் காட்டியே ஆண்மை, பெண்மை குறித்த வரையறைகளைக் கூறுவோர் உண்டு. இவ்வகையில் 'பாலினம்' என்பது இயற்கையாக அமைந்துள்ள அடையாளம், அது பிரச்சனைக்குரியதும் அல்ல விவாதத்துக்குரியதும் அல்ல. 'சமூக பாலினம்' என்றும் பின்னதை 'பாலின பாகுபாடு' என்றும் குறிக்கலாம். குறிப்பிட்ட சமுதாயமானது ஆண்மை,பெண்மை குறித்துப் பேசும் உண்மைகளை விவரிக்கவும், விளக்கவும், ஆராயவும் பாமாவின் சங்கதி நாவல் வழி கோலுகின்றது.

காயங்கள் காலப்போக்கில் தழும்புகளாவது நியதி, ஆனால் நாவலாசிரியர் பாமா தழும்புகள் காயங்களாக என்றும் ரணவேதனை தருவதாக உணருகின்றார். அவ்வுணர்வுகளின் வெளிப்பாடு சங்கதி நாவல் சங்கதியில் பதிவு செய்யப்பட்டுள்ள பெண்கள் பாலின பாகுபாட்டையும் எதிர் கொண்டு துடிப்புடன், உயிரோட்டத்துடன், உறுதியுடன் வாழ்ந்து கொண்டிருப்பதாக பாமா பதிவு செய்கிறார்.

"எங்க ஊர்ல பொண்ணு, ஆணுன்னு வித்தியாசங் காட்டாமத்தாம் பிள்ளயைப் பெத்தாக.ஆனா வளக்கும் போது ஆம்பளைக தான் அதிகாரத்தக் காட்டிகிட்டு அலைறாக" (பாமா, 2004:15) என்று தொடங்கும் வரிகள் பாலின பாகுபாடு காலங்காலமாக எவ்வாறு நிலைநிறுத்தப்படுகின்றது என்பதை வெளிப்படுத்துகின்றது.

"பாட்டி சட்ட போட்டும் நாம் பார்த்ததில்ல, அவுக காலத்தல கீச்சாதிப் பொம்பளைக சட்டபோடக்கூடாதாம். எங்க பெரீம கூட சட்ட போடல" (பாமா,2004:116) என்னும் பாமாவின் பதிவு தோலுக்குச் சீலைப் போராட்டத்தை நினைவுபடுத்துகின்றது. தமிழ்நாட்டில் மட்டுமல்லாது வட இந்தியாவிலும் மாதீய சமூகத்தில் திருமணமான பெண்கள் மேல் சட்டைகள் அணியக் கூடாது. அவர்கள் முலைகள் தெரிய வெற்று உடம்போடுதான் இருப்பார்கள் என்பதை அருந்ததி ராய்(2010 : 59 ) தோழர்களுடன் ஒரு பயணம் என்னும் நூலில் பதிவு செய்கின்றார்.

காலங்காலமாக இந்தச் சமுதாயம் பெண்களைப் போகப்பொருளாகவே கருதுகின்றது. எனவே தான் அவளுக்குத் தன் முழு உடமலையும் மறைக்கும் சுதந்திரம் மறுக்கப்பட்டு வந்துள்ளது.

உடல் அளவில் பலவீனமானவர்கள் என்று காலந்தோறும் பெண்களுக்குப் போதிக்கப்பட்டாலும் மனதளவில் வைராக்கியம் வாய்ந்தவர்கள் நம் கிராமத்து மகளீர் என்பதற்கு பாமாவின் பச்சமுக்கிப்பிள்ளையும் வைரமுத்துவின் கருவாச்சியும் சாட்சிகளாகின்றனர்.

"நெரமாத்தச் சூலி. போன லெக்குல வலிகண்டு அங்கனக்குள்ளயே பிள்ளையப் பெத்துட்டா. பல்லறுக்கக் கொண்டுபோன பன்னறுவாளக் கொண்டு தொப்புளுக் கொடிய அறுத்துப்போட்டு, நஞ்சிக் கொடிய அங்ன குழியத் தோண்டிப் பெதச்சுட்டு பிள்ளையுந் தூக்கிட்டு புல்லுக்கட்டையும் தூக்கிட்டு வீட்டுக்கு வந்துட்டா" (பாமா, 2004: 118)

வைரமுத்துவின் கருவாச்சியும் அகமலைக்கு விறகெடுக்கச் செல்கிறாள். அங்கே 'இடுப்புவலி' கண்டு யாருமில்லாத அத்துவானக் காட்டில் தானே பிள்ளையை பெற்றெடுத்து குழந்தையும் தாயுமாக தலையில் விறகுகட்டுடன் ஊர்வந்து சேர்வதை வைரமுத்து காட்சிப்படுத்தியுள்ளமை படிப்பவரின் கண்களில் கண்ணீரை வரவழைக்கும் பான்மையது.

இத்தகு மனதிடம் வாய்ந்த மகளீரை சமூகம் நீ பூவினைப் போன்று மென்மையானவள் என்கிறது. தன்னுடைய பேறுகாலத்தைத் தானே பார்த்துக் கொள்ளும் பெண்ணுக்கு Weaker Sex எனச் சமூகம் சான்றளிப்பது பாலினப் பாகுபாட்டின் வெளிப்பாடாகும்.

பிறக்கும் போதே பெண்ணும் ஆணும் வேறுபடுத்திப் பார்க்கப்படுகிறார்கள். "கைப்பிள்ளையா இருக்கும்போது, ஆம்பளப் பிள்ளய அழ உடமாட்டாக. ஆம்பளப் பிள்ள அழுதா ஒடனே தூக்கிப் பால் குடுப்பாக. பொம்பளப் பிள்ளன்னா அப்பிடி இல்ல. பால் குடுக்குறதுல கூட ஆம்பிளன்னா ரொம்ப நாளைக்குக் குடுப்பாக. பொம்பளன்னா சீக்கிரத்துல பால்குடி மறக்கவப்பாக. சீக்கு நோக்குன்னு வந்தாலும் ஆம்பளன்னா அக்கறையா ஓடிஓடி கவனிப்பாக. பொம்பளன்னா வேகாரிகப் போடுவாக" (பாமா, 2004: 118-119) என்னும் பாமாவின் பதிவு பாலினத்தால் வேறுபட்ட ஆண்,பெண் மீது

பாலினப் பாகுபாடு எவ்வாறு கோலோச்சுகின்றது என்பதைக் காட்டிகின்றது. ஆண்பிள்ளை ஆளப்பிறந்தவன், எனவே இளமைப்பருவத்திலிருந்தே நன்கு கவனிக்கப்பட வேண்டியவனாகவும், பெண் அடங்கிப் போக வேண்டியவள் மிஞ்சமிருப்பதை உண்டு வாழ வேண்டியவள் என்ற கருத்தை இச் சமூகம் கட்டமைக்கின்றது. ஆண் காப்பவன், பெண் காக்கப்படவேண்டியவள். ஆண் ஆளப்பிறந்தவன், பெண் அடிமைப்பட்டவள் என்ற கருத்தாக்கங்களின் விளைவே “சாண் ஆனாலும் ஆண் பிள்ளை” என்னும் பழமொழி. அந்த ஆண் பிள்ளை பாதுகாக்கப் புடவேண்டும் எனப் பாலினப் பாகுபாடு வரையறை செய்கின்றது.

“ஆம்பளைக கெணக்கா வேல வெட்டியுஞ் செஞ்சுகிட்டு, தொயந்து பிள்ளைகளையும் பெத்துக்கிடடு கஸ்டப்பட வேண்டி இருக்கு. ஆம்பளைக்கென்ன. காட்டுவேலையோட முடிஞ்சது. பெறந்தா ஆம்பளையாப் பொறக்கனும். பொட்டச்சிகளாப் பொறந்து என்ன சொகத்தக் கண்டோம். நோனி பிதுங்க காட்லயும் வீட்லயும் வேல செய்யறதுதான் மிச்சம் (பாமா, 2004 : 118). பொருளாதார சுதந்திரம் பெற்றால் பெண் அடிமைத்தனத்திலிருந்து விடுபடலாம் என்ற கருத்தாக்கத்தின் விளைவாக இன்று பெண்கள் பலரும் கல்விகற்று வேலைக்குச் செல்லும் வாய்ப்பினை பெற்றுள்ளனர். பெண் பொருளாதார சுதந்திரம் பெற்றுவிட்டாளா? அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டுவிட்டாளா? அல்லது அலுவலகத்திலும், வீட்டிலும் நோனி பிதுங்க வேலை செய்கிறாளா? பாலினப் பாகுபாடு நீ என்னதான் ஆண்களுக்கு சரி நிகர் சமானமாய் வேலை பார்த்து பொருள் ஈட்டிக் கொண்டு வந்தாலும் நீ தான் உன் பிள்ளைகளையும், உன்னைக் கொண்டவனையும் கடமை தவறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் எனப் பணிக்கின்றது. அவ்வாறு இருந்தால் தான் அவளை ஒரு சிறந்த பெண்மணியாக இச் சமூகம் கருதும்.

பெண்கள் எல்லா விதத்திலும் கட்டுப்படுத்தப்படுகிறார்கள். பெண்கள் மரம் ஏற அனுமதிக்கப்படுவதில்லை. அப்படி ஏறினால் 500 ரூபாய் அபராதம் அல்லது கோழி ஒன்றைக் கொடுக்க வேண்டும். ஒரு ஆண் பெண்ணை அடித்து அவள் திருப்பி அவனை அடித்துவிட்டால், அவள் ஒரு ஆட்டை அபராதமாகத் தர வேண்டும். ஆண்கள் மாதக் கணக்கில் மலைக்கு வேட்டையாடச் செல்வார்கள். வேட்டையாடப்பட்ட மிருகத்திடம் கூடச் செல்லப் பெண்களுக்கு அனுமதியில்லை. கறியின் நல்ல பகுதிகள் எல்லாம்

ஆண்களுக்குத் தான் போய் சேரும். பெண்களுக்கு முட்டை சாப்பிட அனுமதி இல்லை என்று குடும்பத்திலிருந்துத் தப்பிக்க வட இந்தியாவில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் தீவிரவாத அமைப்பின் கொரில்லாப் படையில் இணைந்த சுமித்ரா என்னும் பெண் கூறியதாக அருந்ததிராய் (2010:62) பதிவு செய்துள்ளார்.

பாலின வேறுபாடு (Gender Distinction) என்பது இயற்கை விதித்த நியதி ஆனால் பாலினப் பாகுபாடு (Gender Discrimination) என்பது இந்தச் சமூகம் வரையறை செய்யும் நியதி. இந்நியதி ஆணுக்கு ஒன்றாகவும். பெண்ணுக்கு ஒன்றாகவும் தான் செயல்படுகின்றது. காலங்காலமாக, உலகின் எந்த ஒரு பகுதியிலும் எந்த ஒரு சாதியிலும், எந்த ஒரு மதத்திலும்,அதன் செயல்பாடு மாறவில்லை என்பதைத் தான் மேற்கூறிய செய்திகள் சுட்டிக்காட்டுகின்றன. பாமாவின் சங்கதி கிராமத்து தலித் மகளிர் மீது பாலினப் பாகுபாடு செலுத்தும் ஆதிக்கத்தை மிகத் தெளிவாகச் சுட்டிக் செல்கின்றது.

---

## வாசகர் வாசகம் (1)

பெருந்தகை ஐயா, வணக்கம்.

வாழிய நலனே. இற்றைச் செய்தியில் நம் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்குத் தமிழ்த்தாய் விருது வழங்கிச் சிறப்பிக்க, அரசு எடுத்திருக்கும் நல்ல முடிவு பாராட்டுக்கு உரியது. இயல்பாகச் சீரிய பணிகளை ஆற்றிவரும் சங்கம், மேலும் மேலும் சீரிய பணிகளாற்றித் தமிழ்த்தாயின் திருக்கோயிலாகத் திகழ்ந்து, நிறுவனப் பெருமகனார் பாண்டித்துரையார், பாற்கரர் ஆகியோர் நினைந்த பெருந்தகைத் தொண்டுக்குப் பதிவாவணமாகத் திகழ்வதாகத் தொடர்ந்து சங்கப் பொறுப்பாளர்களும் கல்லூரிப் பொறுப்பாளர்களும் ஆற்றும் தொண்டுகளால் மீப்பெரும் பேறுகள் பலவும் பெற்றுச் சங்கமும் கல்லூரியும் செந்தமிழ் இதழும் தேர்ச்சி வளமும் திகழுமாக!

வாழிய நலனே! வாழிய நலனே!

**இரா. இளங்குமரன்**
அல்லூர்

# ஏக்கங்களின் தாக்கங்கள்

கா. வேழவேந்தன்

'சப்பா'னை மிஞ்சுகின்ற வகையில் ஈங்கே
தரமான தொழில்வளர்ந்தே ஓங்கி டாதா?
'அப்போலோ' அனுப்பிவைக்கும் அமெரிக் காவே
அணுகிடின்நாம் கடன்கொடுக்கும் நிலைவா ராதா?
'ஒப்பரிய பொதுவுடைமைத் தோட்டம்' என்றே
உவந்துநமை உலகமெலாம் போற்றி டாதா?
கப்பலுடன் அயல்நாட்டார் வந்தே நந்தம்
கடலோரம் பொருள்களுக்கே ஏங்கு வாரா?

'நூற்றுக்கு நூற்றுவரும் படித்தோம்' என்ற
நுட்பமிகு தேன்செய்தி மெய்யா காதா?
'சோற்றுக்குப் பஞ்சம்' எனக் கேட்போருக்கே
துறைமூலம் அரிசியினை அனுப்பு வோமா?
'நாற்றங்கால்' போல்நெருக்கக் குழப்பம் இன்றி
'நாம்இருவர் நமக்கொருவர்' நிலைவா ராதா?
ஆற்றல்மிகும் அறிவியலில் உயர்ந்தோர் என்றே
அகிலத்தார் நமைப்பாடம் கேட்டி டாரா?

வீதிக்கு வீதியிங்கே கட்சி வைத்து
விழலுக்கே நீர்இறைக்கும் நிலைமா றாதா?
சாதிவெறி, வேற்றுமைகள், மாயை யெல்லாம்
தவிடுபொடி யாய்மாறிப் பறந்தி டாதா?
நீதிவழிக் **'குறள் சட்டம்'** உலகை யாளும்
நேர்த்தியைநாம் இருவிழியால் காணு வோமா?
**'மேதினியில் நம்நாடே முதலில்' என்னும்**
**மிடுக்கான சொல்வந்து செவிவீ ழாதா?**

# செறாஅஅம்

ஆறுவிரல் ஐம்பொறி
வீரசோழபுரம்

செறாஅஅம் என்பது உயிரளபெடைய தன்னகத்தே கொண்ட ஒரு செய்யுட் சீராகும். செய்யுளில் ஓசை குறையும்போது உயிர் நெடில் எழுத்து தன் அளவில் நீண்டு ஒலிக்கும். இவ்வாறு நீட்டி ஒலிப்பதைக் குறிப்பதற்கு வரி வடிவில் அந்நெடிலின் இனமான குற்றெழுத்து அதற்குப் பக்கத்தில் சேர்க்கப்படும். இதனை தமிழ் இலக்கண நூலாம் நன்னூல்

*இசைகெடின் மொழிமுத லிடைகடை நிலைநெடில்*
*அளபெழு மவற்றவற் றினக்குறில் குறியே.* நன்னூல் - 91

என்று மொழிகிறது. இவ்வாறு உயிர் நெடில் அளபெடுத்து மாத்திரை மிகுவதை உயிரளபெடை என்பர். 'அன்பு' என்ற சொல்லும் புணர்ந்து அளபெடை என்ற சொல் பிறந்தது. அளபு-அளவு-மாத்திரை. எடை-நிறை-மிகுதி. அளபெடை என்பதற்கு மாத்திரை மிகுவது என்பது பொருள்.

உயிரளபெடை மூன்று வகைப்படும். அவை 1.இசைநிறை அளபெடை, 2. இன்னிசை அளபெடை, 3.சொல்லிசை அளபெடை, ஆகும்.

இசைநிறை அளபெடையில் அளபெடையைக் குறிக்கும் எழுத்தை நீக்கினால் யாப்பிலக்கணப் பிழை ஏற்படும்.

திருக்குறளில் அமைந்துள்ள சில இசைநிறை அளபெடைகளைக் காண்போம். அவற்றில் இனக்குறில் எழுத்தை நீக்கினால் யாப்பிலக்கணப்பிழை ஏற்படுவதையும் காண்போம்.

1. உழாஅர் உழவர் - (குறள் - 14) இவ்விரு சீர்களும் மாமுன் நிரையாகி இலக்கணப் பிழையின்றி அமைந்துள்ளன. அளபெடையைக் குறிக்கும் இனக்குறில் எழுத்தை (அ) நீக்கினால் உழார் உழவர் என்று விள முன் நிரை என்றாவதுடன் ஓரசையாகி யாப்பிலக்கணப் பிழை ஏற்படுகிறது. எனவே இது இசைநிறை அளபெடையாம்.

2. கழாஅக்கால் பள்ளியுள் - (குறள் -840) இவ்விரு சீர்களும் காய் முன் நேராகி இலக்கணப் பிழையின்றி அமைந்துள்ளன. அளபெடையைக் குறிக்கும் இனக்குறில் எழுத்தை (அ) நீக்கினால் கழாக்கால் பள்ளியுள் என்று மாமுன் நேராகி யாப்பிலக்கணப் பிழை ஏற்படுகிறது. எனவே இது இசைநிறை அளபெடையாம்.

3. செறாஅஅய் வாழிய - (குறள் - 1200) இவ்விரு சீர்களும் விள முன் நேராகி இலக்கணப் பிழையின்றி அமைந்துள்ளன. அளபெடையைக் குறிக்கும் ஓர் இனக்குறில் எழுத்தை (அ) நீக்கினால் செறாஅய் வாழிய என்று மாமுன் நேராகி இலக்கணப் பிழை ஏற்படுகிறது. அளபெடையைச் குறிக்கும் இரண்டும் இனக்குறில் எழுத்துக்களையும் (அ) நீக்கினால் செறாய் வாழிய என்று ஒரசையாகி இலக்கணப் பிழை ஏற்படுகிறது. எனவே இது இசைநிறை அளபெடையாம். இவ்வளபெடை நான்கு மாத்திரை கால அளவில் ஒலிக்கும். நெடில் (றா) இரண்டு மாத்திரை. இனக்குறில்கள் இரண்டு (அஅ) இரண்டு மாத்திரை / ஆக நான்கு மாத்திரையாம். 'உயிரளபெடை சிறுபான்மை நான்கு மாத்திரையினதாய் வருதலுமுண்டு' என்று நன்னூல் 99வது நூற்பாவின் உரையில் காணலாம்.

திருக்குறளில் அமைந்துள்ள சில இன்னிசை, சொல்லிசை அளபெடைகளைக் காண்போம். அவற்றில் இனக்குறில் எழுத்தை நீக்கினாலும் யாப்பிலக்கணப் பிழை ஏற்படுவதில்லை என்பதையும் காண்போம்.

1. பெய் திரீஇயற்ற - (குறள்- 660) இவ்விரு சீர்களும் காய்முன் நேராகி யாப்பிலக்கணப் பிழையின்றி அமைந்துள்ளன. அளபெடையைக் குறிக்கும் இனக்குறில் எழுத்தை (இ நீக்கினாலும் பெய்திரீயற்று என்று விள முன் யாபபிலக்கணப் பிழை ஏற்படுவதில்லை. எனவே இது இசைநிறை அளபெடையன்று.

2. கொடுப்பதூ உம் - (குறள் - 1005) இவ்விரு சீர்களும் காய் முன் நேராகி யாப்பிலக்கணப் பிழையின்றி அமைந்துள்ளன. அளபெடையைக் குறிக்கும் இனக்குறில் எழுத்தை (உ) நீக்கினாலும் கொடுப்பதூம் துய்ப்ப என்று விள முன் நேராகி யாப்பிலக்கணப் பிழை ஏற்படுவதில்லை. எனவே இது இசைநிறை அளபெடையன்று.

3. செறாஅரெனச் செறியென் – (குறள் – 1292) இவ்விரு சீர்களும் காய் முன் நேராகி யாப்பிலக்கணப் பிழையின்றி அமைந்துள்ளன. அளபெடையைக் குறிக்கும். இனக்குறில் எழுத்தை (அ) நீக்கினாலும் செறாரெனச் சேறியென் என்று விள முன் நேராகி யாப்பிலக்கணப் பிழை ஏற்படுவதில்லை. எனவே இது இசைநிறை அளபெடையன்று.

இதுவரை கூறிய அளபெடைகளை செயற்கை அளபெடைகள் என்று சிலர் கூறுவர். ஆடூஉ. மகடூஉ, குழூஉ எனச் சில சொற்கள் அளபெடையாகவே வழங்கும். இவற்றைச் சிலர் இயற்கை அளபெடை என்பர்.

திருக்குறளில் ஐம்பதற்கும் மேற்பட்ட அளபெடைகள் அமைந்துள்ளன. அளபெடைகளைப் பயன்படுத்திச் செய்யுள் இயற்றுவது எளிதாகும். இருந்தும் நாம் அளபெடைகளைப் பயன்படுத்துவதில்லை. அளபெடைகள் வழக்கொழிந்து போகலாமா?

---

## வாசகர் வாசகம் ②

மதிப்புயர் செந்தமிழ் ஆசிரியப் பெருந்தகை அவர்கட்கு

வணக்கம்.

*2012 பிப்ரவரித் திங்கள் இதழில்* – குறுந்தொகை உறைகளில் இலக்கண மேற்கோள் காட்டிய உ.சே.சா. பற்றிய குறிப்பினும் பெருமான் அரங்கனாரை அறிமுகப்படுத்தியது தான் சிறப்பு எனக் கருதினேன். மரத்தின் வேராகப் பல உள்ளனர் என்பதற்கு இக்கட்டுரை ஒரு சான்று.

ஆறுவிரலாரின் பதினாறுபேறுகள் அருமை.

எஸ். இராமகிருட்டிணரின் பாரதக் கதை மீட்டுருவாக்கப் பார்வை புதிதாக இருந்தது என்பதை திரு. அ. ரஜினி அவர்கள் அருமையாகச் சுட்டியிருந்தார்.

**தெ. முருகசாமி**
புதுச்சேரி

# சேமித்துச் செழித்திடுவோம்

மா. இராமச்சந்திரர்

ஆற்றினிலே இட்டாலும் அளந்திடுக!
அறிவார்ந்த முன்னோர்சொல் போற்றிடுக!
காற்றுள்ள போதினிலே தூற்றிடுக!
கவனமாய்க் காசதனைச் சேர்த்திடுக!
ஏற்றமான எதிர்காலம் அமைந்திடவே!
எப்படியும் சேமிக்கப் பழகிடுக!
ஏற்றூண் இல்லாமல் இருந்திடவே
இதுவொன்றே வழியொன்று கண்டறிக!

ஓட்டைக் கலயத்துள் நீர்போலே
ஓட்டைக் கைபணமும் ஒடிடுமே!
தேட்டை முழுவதுமாய்ச் செலவுசெய்தால்
தேவை நெருக்கினிலே யார்தருவார்!
வீட்டுள் சேமித்த பண மிருப்போர்
வேதை துயரின்றி வாழ்வுறுவார்!
வாட்டம் ஏதுமிலா வாழ்வுபெற!
வைப்பு நிதிசேர்க்கப் பழகிடுவோம்!

சிக்கனமே சேமிப்பின் முதற்படியாம்!
செல்வத்தைச் சிறைப்பிடிக்கும் தனிவழியாம்!
எக்கணத்தில் எதுநேரும் யாரறிவார்!
இதையெண்ணிச் சேர்ப்பது பேரறிவாம்!
சிக்கனமே இல்லாமல் சீர்குலையும்!
சேர்த்தபணம் இருந்தாலே சீர்பெருகும்
சேர்த்தபணம் இருந்தாலே சீர்பெருகும்!
இக்கணமே சிக்கனத்தின் வழியறிவோம்!
இல்வாழ்வை இனிதாக்கி மகிழ்ந்திடுவோம்!
இரட்டிப்பாய்ப் பணம் தருவோம் என்றுரைக்கும்
ஏமாற்று நிறுவனத்தை நம்பாதீர்!
புரட்டர்தம் பேச்சாலே பொருளிழந்து
புவியினிலே மோசமானோர் பலருண்டு
கரப்பில்லா வங்கிதனில் சேர்த்திடுவீர்!
களிப்பான எதிர்காலம் கண்டிடுவீர்!
தரணியிலே தரமுயர்ந்து வாழ்ந்திடவே!
தவமாகச் சேமித்துச் செழித்திடுவர்!

# சங்க காலத்து இசைக் கருவிகளும் வழிபாடும்

ஆதி. பாலசுந்தரன்
சென்னை

## முன்னுரை

கடவுளர் திருமுன்னர் இசைக்கருவிகளை இசைத்து வழிபாடு செய்யும் வழிபாட்டு முறை சங்ககாலத்தில் இருந்து வந்தது.

பக்தி உணர்வை மிகுதிப்படுத்துவதற்காக இசைக் கருவிகளின் இசை தூண்டு கோலாகப் பயன்பட்டது. தெய்வத்தின் முன்னால், மன ஒருமைப்பாட்டுடன் வழிபாடு செய்வதற்கு இவ் இசை மிகவும் உதவியது.

மனப் பக்குவம் பெறாத மக்களைக் கவருவதற்கும் இசை பெரிதும் பயன்பட்டது.

## இசைக்கருவிகள்

தங்களின் இயல்பான விழைவால் மனித நட்புறவை வளர்த்துக் கொள்ளுவதற்குத் தங்களின் அரிய கற்பனைத்திறத்தாலும், தேர்ந்த நுண்கலை உணர்வாலும் இசைக் கருவிகளையும், சுரம் தாளம் முதலான இசைக் கூறுகளையும் சங்ககால இசை வல்லுநர் கண்டறிந்தனர்.

முதல் இசைக் கருவி வேய்ங்குழல் யாழ், தொண்டகப் பறை, பம்பை, உடுக்கை, மத்தளம், தட்டை, முழவு, காகளம், பணவம், சங்கு, ஆனகம், துந்துபி, சல்லரி, கொடுகொட்டி, தண்ணுமை முதலிய பலவகை வடிவமைப்புக்களை உடைய இசைக்கருவிகள் சங்க காலத்தில் வழிபாட்டின் போது இசைக்கப்பட்டன.

ஒலி பெருக்கி போன்ற மின்கருவி வசதிகள் இல்லாத அக்காலத்தில் தொலைவில் உள்ளவர்களும் இசையைச் செவிமடுத்து மகிழ்வதற்கு உதவும் வகையில் சில இசைக் கருவிகள் வடிவமைக்கப்பட்டிருந்தமை அவர்களின் சிந்தனைத் திறனையும், கைவினை ஆக்கத்தையும் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

## பூசை அறிவிக்க இசைக்கருவிகள்

திருக்கோயில்களில் நிகழும் புலர் விடியல் பூசை, நண்பகல் பூசை, மாலைநேரப் பூசை, இராக்காலப் பூசை, ஆகிய பூசைகளை அறிவிப்பதற்கு அந்த அந்தக் காலப் பூசைகளுக்கு ஏற்றவகையில் முறைப்படுத்தி வைத்திருந்த இசைக் கருவிகளை இசைத்தனர்.

குறிப்பிட்ட இசைக்கருவி எழுப்பும் ஒலியைக் கொண்டு இன்ன நேரத்தில் நிகழும் பூசை எனத் தெரிந்து கொள்ள முடிந்தது.

கோயிலில் திருவிழாத் தொடங்க உள்ளது என்பதைச் சுற்றிலும் உள்ள சிற்றூர் மக்கள், இவ் இசைக் கருவிகள் எழுப்புகின்ற ஆரவார ஒலியைக் கேட்டு அறிந்து திருவிழாவுக்கு வந்து கலந்து கொண்டனர்.

நெடுந்தொலைவு கேட்பதற்கும் விரைந்து சென்று அடைவதற்கும் பெருமுழக்க முரசு, பேரொலி எழுப்பும் கொம்பு, முதலிய இசைக்கருவிகள் வடிவமைத்துச் செய்யப்பட்டிருந்தன. இவை, சிறந்த, "மொழியிலாச் செய்தித் தொடர்புச் சாதனங்களாக"ப் பயன்பட்டன.

## யாழ்

இசைக்கருவிகளுள் ஒன்று யாழ் சீறியாழ், பேரியாழ், மகரயாழ், செங்கோட்டியாழ், சகோடயாழ் எனப் பல பெயர்களுடன் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வடிவத்தில் அமைக்கப்பட்டிருந்தன.

## மகதி - மாதங்கி

அணங்கு மெய்ந் நின்ற அமைவருகாட்சி (பொருநராற்றுப்படை அ - 20) தனக்குரிய தெய்வமான மாதங்கியைத் தன்னகத்தே பொருந்திய யாழின் அழகிய காட்சி இங்கே யாழ் எனக் குறிப்பிடுவது,

ஆயிரம் நரம்புகளை உடைய 'மகதி' என்னும் வீணையை. யாழுக்குரிய இசைத் தெய்வம் 'மாதங்கி'

இசைக் கலையைப் பயிலுவதற்கு மிகுந்த ஈடுபாடும் அரிய உழைப்பும் இடையறா முயற்சியும் வேண்டும். தெய்வத் தோடு இயைபு படுத்திக் கூறும் மரபால் இசைக்கலை மீது நம்பிக்கையும் பக்தியும் ஏற்படும். பாடலைப் பாடிய

ஆசிரியர் கூறா விட்டாலும், 'அணங்கு' என்னும் சொல்லுக்கு 'மாதங்கி' என்னும் யாழின் தெய்வப் பெயரை உரையாசிரியர் கண்டறிந்து கூறுகிறார்.

## பிரம்ம வீணை

தெய்வப் பிரமம் செய்குவோரும் (பரிபாடல் : பா-8.அ.40) - பிரம்ம வீணையை இசைப்போரும்....

பலவகை வடிவ அமைப்புகளையும் இசை கூடும் வகையால பலவித இன்னோசை எழுப்பும் இயல்புகளையும் உடைய வீணைகள் சங்ககாலத்தில் வழக்கத்தில் இசைக்கப்பட்டு வந்தன.

அவற்றுள் ஒன்று பிரம்ம வீணை, நாரத வீணை போன்றது. வீணையும்யாழும் வடிவ அமைப்பில் சற்று வேறுபட்டவை.

## சிவனும் வீணையும்

சங்க காலத்தில், யாழ்ப்பாணர்களின் கைகளால் இசைக்கப்பட்ட யாழ், ஒரு காலத்தில், வீணையாக மாறி, சிவபெருமான் கரங்களில் இலங்குமாறு, சிவனுக்கு உருவத் திருமேனியை அமைத்துத் தொடர்புபடுத்திப் பெருமைப்படுத்தினர்.

"விட முண்ட கண்டன், மிக நல்ல வீணை தடவி", "எம் இறை நல்வீணைவாசிக்கும்மே" என நாயன்மார்கள் பாடிப்பரவுகின்றனர்.

## தேவதுந்துபி

அந்தரப் பல் இயம் கறங்கத் திண்காழ் வயிர் எழுந்து இசைப்ப வால்வளை ஞரல உரம் தலைக் கொண்ட உரும் இடி முரசமொடு"

(திருமுருகாற்றுப்படை : அ.119. 121)

....அந்தரப் பல் இயம் - தேவதுந்துபிகள். வடிவத்தில் பெரிய 'வங்கா' என்னும் தேவ துந்துபிகள் ஒருங்கிணைந்து இடையறாது பேரொலி எழுப்புகின்றன.

வலிய கைப்பிடியை உடையது. நீண்டு மேல் நோக்கி வளைந்தது. கொம்பு என்னும் இசைக்கருவி, யானையைப் போன்று பிளிறி ஒலி எழுப்புகிறது. மங்கலச் சங்கு முழுங்குகிறது. இடியோசை போல மங்கல முரசு முழுங்குகிறது.

வடிவப் பெருமை ஒளியளவுப் பெருமை ஆகிய சிறப்புக்காகத் 'தேவதுந்துபி' எனச் சொல்லப்படுகிறது.

## வடமொழி ஒப்பு

"துந்துபி வடிவா போற்றி"
"கோல் ஒலி வடிவா போற்றி"
உருத்திரம் – நமகம் – 7–1–1)

கோல் ஒலி வடிவா – கொம்பு வாத்தியம் எழுப்புகின்ற ஒலி வடிவானவனே!

இன்னிசைக் கருவிகளிலும், அவை எழுப்பும் இன்னிசை ஒலியிலும் தமிழர்கள இறைவனைக கண்டுணர்ந்த தன்மையை, இவ் வடமொழிச் சுலோகப் பகுதியிலும் சொல்லியிருப்பது ஒப்பிட்டு மகிழத்தக்கது.

## குழல், யாழ், முழவு

"குழல் அகவ யாழ் முரல
முழவு அதிர முரசு இயம்ப" (பட்டினப்பாலை : அ –156 –157)

கானக மயில் அகவுவது போன்று குழல் அகவுகிறது. வண்டின் ரீங்கார ஒலி போன்று யாழ் ஒலி எழுப்புகிறது. முழவு அதற்குரிய இயல்பான அதிர் ஓசையை உண்டாக்குகிறது. முழவைக்காட்டிலும் சற்று மெல்லியதாக முரசு ஒலிக்கிறது. இங்கே ஒப்பிட்டுக் காட்டுகிறார் ஆசிரியர்.

ஒவ்வொரு இசைக்கருவியும் எழுப்புகின்ற ஒலிக்குப் பொருத்தமான சொற்களைப் பெய்து ஆசிரியர் பாடியிருப்பது. ஆசிரியரின் ஒலி நுட்ப அறிவையும், இசைப்புலமையையும்,ஒப்பிட்டு நோக்கும் ஆற்றலையும் புலப்படுத்துகின்றது.

ஒலி அதிர்வு, ஒலி அளவு, ஒலி வேறுபாடு, ஒலிநுட்பம், ஒலி அலை நீளம் ஆகியவற்றையும் நுட்பமாகக் கேட்டு அறிந்து, ஒப்பிடடு நோக்கி, ஓசைக்கு ஏற்ற வண்ணம் அக்கருவிகளுக்குப் பெயரிட்டு அழைத்தமை கவனிக்கத்தக்கது.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

# வாசகர் வாசகம்

3

மதிப்பிற்குரிய ஐயா, வணக்கம்.

நேற்றைய (10-04-12) செய்தியில் தமிழக முதல்வர் அவர்களால் **"மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்குத் தமிழ்த்தாய்"** விருதும், **ரூ. 5 இலக்கத்துக்கான (5,00,000)** காசோலையுடன் பாராட்டுச் சான்றிதழும் சித்திரை முதல் நாளன்று வழங்கப்படும்" என அறிவிக்கப்பட்டதைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியுற்றேன்.

தமிழ் நாட்டிலுள்ள சங்கங்களில் முன்னோடியான மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்கு முதல் தமிழ்த்தாய் விருது வழங்கப்படுவது பொருத்தமானதும் சிறப்பானதும் உரிமையானதும் ஆகும்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தையும், செந்தமிழ்க் கல்லூரியையும், செந்தமிழ் திங்கள் இதழையும் திறம்பட நிர்வகித்து வரும் தங்களின் சீரிய தொண்டுக்குக் கிடைத்த பரிசாகவே இதனைத் தமிழுள்ளங்கள் போற்றி வரவேற்கின்றன. செந்தமிழ் திங்களிதழில் தமிழியலின் பல்துறை ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுத் தாங்கள் ஆற்றும் தமிழ்ப்பணிக்கு உரிய பாராட்டாக இவ்விருது நிலைத்து ஒளி வீசும்.

என் ஆசிரியர், மேனாள் தமிழ் வளர்ச்சி இயக்குநர், முனைவர் த. பெரியாண்டவன் அவர்களின் வழிகாட்டுதலின்படி நான் வரைந்த கட்டுரைகளையும் இதழில் வெளியிட்டதற்கான நன்றியுணர்வு மேலீட்டில், தமிழ்த்தாய் விருதுப் பேறு செம்மையாய் அமைய என் இனிமை நிறைந்த வாழ்த்துகளையும், இதயம் கனிந்த பாராட்டுகளையும் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வெ. பெருமாள்சாமி,** எம்.ஏ., பி.காம்.,
சென்னை

# வாசகர் வாசகம்



**தேசத்தொண்டு :**

பாலவநத் தம்தன்னில் பொன்னுசாமித் தேவரின்
பாடுபுகழ் நன்மகன்பாண் டித்துரைத்தே வர்சீர்
கோலமிகு குணச்சிகரம் நேர்எனவே பிறந்தார்!
குவலயத்தின் விடிவெள்ளி பாரதத்தின் விடுதலை
வெள்ளிக்காய்க் கப்பல்நல் சிதம்பரனார் நிறுவ
ஒண்பொருளாய் உருவாஓர் இலட்சம்தந் தார்! ஓ!
நாள்மீன்நேர் நற்புகழை நானிலத்தில் கொண்டார்!
நல்காந்தி போல்பலரின் உழைப்புகனி: விடுதலை!

**தமிழ்த்தொண்டு**

மதுரையில் நல்நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவினார்
பாண்டியன்புத் தகசாலை, செந்தமிழ்க்கல் லூரி
மதுமலர்நேர் கல்விக்குச் சேதுபதி பெயரில்!
மன்னுதமிழ் அகராதி, பன்னூல்தி ரட்டு,
எதுகைமோ னையழகுத் தமிழ்க்குப்புத் தணிகள்!
எந்நாளும் புகழ்மணக்கும் செந்தமிழ்நல் இதழை,
மதுரையில் தொடங்கிநூற்றாண் டைக்கடந்தும் ஆயிரத்
தை நோக்கி நடக்கவித்திட் டவர்திறம்தான் என்னே!

**நெஞ்சார்ந்த நல்வாழ்த்துரைப்போம் :**

அச்சு(க்)கூடம், அருந்தமிழ்ப்பா, தந்தவள்ளல் தமிழ்ப்பணி
அச்சுவெல்லம் நேர்தொடரும் தொண்டினுயர் மகுடம்!
இச்சைத்த மிழ்அமுதம் இவ்வையம் கொள்ளவே
இன்பணிகள் தொடங்கிதந்த வள்ளல்தம் வழியிலே
மதுரைத்த மிழ்ச்சங்கப் பணிநன்றாய்த் தொடர்ந்திட
மாண்புநெஞ்சத் தொண்டுள்ளச் சங்கத்தார் உழைக்கிறார்!
புதுமழைநேர் அருள்இறைவன் நலன்அனைத்தும் தந்தே
பொன்நேர்வாழ் வளித்தருள்க எனல்தமிழர் விழைவே!

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா


தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615

பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 April 2012 MA/130/2011-2013

Posted at Madurai BPC on 25th of every month



# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

- ✦ இளம் இலக்கியம்
- ✦ இளங்கலை
- ✦ முதுகலை
- ✦ இளம்நிலை ஆய்வாளர்
- ✦ முதுநிலை ஆய்வாளர்
- ✦ பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

**முனைவர் மு. மீனா**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இரா. குருசாமி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,

**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001

*From*

**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.